Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு
THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 10 செவ்வாய்க்கிழமை (25.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 086

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)


















# நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைக்க சிரேஷ்ட அமைச்சர்கள் கோரிக்கை



**நீதித்துறைக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையில் நிலவும் உச்சக்கட்ட முரண்பாட்டை சுமூகமாக தீர்க்கும் முகமாகவும் இந்த முரண்நிலை மேலும் தீவிரமடைவதை இயன்றவரை தவிர்க்கும் வகையிலும் நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைக்கும்படி ஆலோசனை முன்வைக்கப்பட்டிருக்கிறது.**

நீதித்துறையுடன் நாடாளுமன்றுக்கு தற்போது ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளை சுமூகமான முறையில் தீர்க்கப்படும் வரையில் அடுத்த ஆண்டில் ஜனவரி மாதம் இடம்பெறவிருக்கும் நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்திவைக்கும்படி சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதிய ஆண்டில் நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பிக்கப்பட்டால் பிரதம நீதியரசரின் விவகாரம் மேலும் சூடுபிடிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பதால் இந்த சிரேஷ்ட அமைச்சர்கள் மேற்படி ஆலோசனையை முன்வைத்துள்ளனர்.

சிரேஷ்ட அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண மற்றும் டியூ குணசேகர ஆகியோரே மேற்கண்டவாறு அரசிடம் கோரியுள்ளனர்.

நாடாளுமன்றிற்கும் நீதிமன்றக் கட்டமைப்பிற்கும் இடையிலான முரண்பாடுகள் களையப்படும் வரையில் நாடாளுமன்ற

19 ஆம் பக்கம் பார்க்க



அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

## மதுபான நிலையங்கள் இன்று மூடப்பட்டிருக்கும்

(கொழும்பு)

மதுபானசாலைகள் யாவும் நத்தார் தினமான இன்று மூடப்படுமென அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. மதுபானசாலைகள் மட்டுமன்றி

ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் ஆகியவற்றிலுள்ள மதுபான விற்பனைக் கூடங்களையும் மூடுமாறு தாம் பணித்துள்ளதாக மதுவரித் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## வினாத்தாள் மோசடி; மாணவர்களுக்கு பரிகாரம்

### அனைவருக்கும் புள்ளிகள்

விஞ்ஞானபாட வினாத்தாளின் சில பகுதிகள் முன்கூட்டியே வெளியாகியது என்பது இப்போது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. இதனால் மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் அனைவருக்கும் குறிப்பிட்ட வினாவுக்கான புள்ளிகள் வழங்கப்படவுள்ளது.

நடந்து முடிந்த க.பொ.த சாதாரண தர விஞ்ஞான பாட வினாத்தாளில் 19 ஆம் இலக்க வினாவிற்கான புள்ளிகள் பரீட்சை எழுதிய அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

இதேவேளை விஞ்ஞானபாட வினாத்தாள் பரீட்சைக்கு முற்கூட்டியே சில பிரதேசங்களில் வெளியாகியமை உண்மை என அமைச்சர் தெரிவித்தார்.

## தினமும் பணிப்பகிஷ்கரிப்பு யாழில் மருத்துவர்கள் அறிவிப்பு

### தினசரி சிகிச்சைகள் முடங்கும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை வைத்தியர்கள் இன்று முதல் தொடர்ச்சியாக காலை 8.00 மணி முதல் 9.00 மணிவரை தமது கடமையிலிருந்து வெளி நடப்புச் செய்து போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

யாழ். போதனா வைத்திய சாலையில் பணிபுரியும் காது, மூக்கு, தொண்டை சத்திர சிகிச்சை நிபுணர் க.திருமாறன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரிகள் இன்னும் பொலிஸாரால் கைதுசெய்யப்படவில்லை. இதனைக் கண்டித்தும் பொலிஸாரின் நடவடிக்கைகளை விரைவுபடுத்தி குற்றவாளிகளைக் கைதுசெய்ய வேண்டும் என்று கோரியே அவர்கள் இந்த தொடர்ச்சியான ஒருமணி நேர கடமை வெளி நடப்பில் ஈடுபடவுள்ளனர்.

இவ்விடயம் சம்பந்தமாக நேற்று யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் ஒன்றுகூடி நடத்திய பொதுக்கூட்டத்திலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த கடமை

19 ஆம் பக்கம் பார்க்க

## திவிநெகும சட்டமூலம் நாடாளுமன்றம் வருகிறது

(கொழும்பு)

'திவிநெகும' சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இச்சட்டமூலம் நிறைவேற்றப்படும் என்று தாம் எதிர்பார்ப்பதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கடுவலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சட்டமூலம் மாகாண சபைகளுக்கு சொந்தமானது என்று, மாகாண சபையின் அனுமதியை பெறும்படி பிரதம நீதியரசர் உள்ளிட்ட உயர் நீதிமன்றம் அதனை மாகாணசபைகளுக்கு அனுப்பியது. வட மாகாணசபை நிர்வாகம் இல்லை என்பதால் ஆளுநர் கையெழுத்திட்டு அதனை அனுப்பினார். எனினும் ஆளுநர் மக்கள் பிரதிநிதி இல்லை என்பதால் அதனை ஏற்க முடியாது என்று உயர் நீதிமன்றம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்த நிலையில் வடமாகாணத்திற்கு திவிநெகும சட்டமூலம் அதிகாரம் அற்றதாக இருக்க வேண்டும். அல்லது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டும். அதுவே எதிர்வரும் 8 ஆம் திகதி இடம் பெறவுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் தொடர் மழை நிவாரணப் பணிகள் துரிதம்

(வவுனியா)

சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் சகல அரச ஊழியர்களின் விடுமுறைகளும் மறு அறிவித்தல் வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்ட செயலாளர் பந்துல ஹரிஸ்சந்திர அறிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக நிலவும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக வவுனியா பிரதேச சபை பிரிவு மற்றும் செட்டிகுளம் பிரதேசங்களைச் சேர்ந்த 3,877 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், இம்மக்களுக்கு தொடர்ந்து மூன்று தினங்களுக்கான உணவுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச்

19 ஆம் பக்கம் பார்க்க

## பெப்ரவரியில் விசேட பரீட்சை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக

(கொழும்பு)

இம்முறை இடம்பெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் மற்றும் அழகியற்கலை பாட பரீட்சைகளை எழுதத்தவறிய மாணவர்களுக்காக விசேட பரீட்சை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் இந்த பரீட்சைகள் இடம்பெறும் என கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## நாளைய தினமுரசில்...




மெய்ப்பொருள் - சமத்துவம் - சகோதரத்துவம்

# பாலன்பிறப்பு எங்கள் வாழ்வுக்கொரு சாட்சி



சத்தியமும் கருணையும் ஏழைகளின் மீது அன்பும் கொண்ட கிறிஸ்து பிறந்த இந்த நாளில் அவர் நினைவாக அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். பாலன் பிறப்பை நினைவு கொள்ளுதல் என்பது, ஒரு சடங்கல்ல. அவருடைய வழிமுறையைக் கடைப்பிடிக்க நாம் பங்கேற்கும் ஒரு சத்திய நிகழ்ச்சி அதுவாகும்.

கிறிஸ்து காட்டிய சத்தியத்தையும் சக மனிதர்களின் மீதான கருணையையும் இரக்கப்படவேண்டியோருக்கான நியாயத்தையும் நாங்கள் ஏற்று வழிநடப்போம் என பாலனின் பிறப்பிலே உறுதியெடுத்து எங்கள் சூழலை ஒளிமயமாக்குவோம்.

கடந்த ஆண்டுகளிலே ஊரடங்கு வாழ்வின் மத்தியிலே, இருளும் துயரும் நிறைந்த பொழுதிலே பாலன பிறப்பு எங்கள் நகரங்களிலும் கிராமங்களிலும் நடந்தன. அப்பொழுது ஒரு கவிஞன் எழுதினான், இவ்வருடம் நீர் பிறந்தபோது, அடைக்கப்பட்டிருந்தன தேவாலயங்கள். கைது செய்யப்பட்டிருந்தது நள்ளிரவு மணியோசை' என்று.

ஆனால், இன்று அந்த நிலை மாறி ஒளியும் மகிழ்வும் நிறைந்த சூழலில், இயப்பான சூழலில் பாலன் பிறப்பு நிகழ்கிறது. நத்தார் பண்டிகையை மகிழ்ந்து கொண்டாடுகின்றனர் எமது மக்கள். நாங்கள் முன்னெடுத்துச் செல்லும் அரசியற் பயணத்தின் வெற்றியை மக்கள் பெற்றிருப்பதற்கு இதுவே சாட்சி. இந்த வழியில் நாம் தொடர்ந்து பயணிப்போம் என இந்த நாளில் உறுதிகூறி என் வாழ்த்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

முருகேசு சந்திரகுமார்,
நாடாளுமன்ற உறுப்பினரும்
குழுக்களின் பிரதித் தலைவரும்.

# வளம்மிக்க வாழ்வுக்கு நத்தார்ப் பண்டிகை வழிசமைக்க வேண்டும்




உலகில் அநீதி ஒழிக்கப்பட்டு, நீதி நிலைநாட்டப்படுவதை முன்னறிவிக்கும் யேசு பாலன் உதித்த நத்தார் பண்டிகை தினம் அனைத்து அவலங்களில் இருந்து மீண்டெழும் எமது மக்களின் எதிர்காலம் நிலையான, நீடித்த அமைதி நிறைந்த வாழ்வுக்கு வழிகோல வேண்டி அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் எனது நத்தார் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மலரப்போகும் புதுவருடத்தில் நிரந்தரத் தீர்வொன்றிற்கு வழிபிறந்து நாட்டின் அனைத்து இன மக்களிடையேயும், சகோதரத்துவம், புரிந்துணர்வு மேலோங்கி அனைவரும் சகல சௌபாக்கியங்களுடனும் இன்புற்று வாழ எனது நத்தார் வாழ்த்துக்கள் உங்களுக்கு உரித்தாகட்டும்.

கந்தசாமி கமலேந்திரன் (கமல்)
யாழ். மாவட்ட அமைப்பாளர்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி.



# சுபீட்சமானதுமான வாழ்வு மலரட்டும்!



மண்ணுலக மக்களின் துன்பங்களை நீக்க இயேசுபிரான் இவ்வுலகில் உதித்த இந் நன் நாளில் அழிவு யுத்தத்திலிருந்து மீண்டெழும் எம மக்களுக்கு சுதந்திரமானதும் சுபீட்சமானதுமான வாழ்வு மலரட்டும் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தனது நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஏழைகளே இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்ற இயேசு பிரானின் கூற்றை மெய்ப்பிப்பதாக வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கி அல்லலுறும் எம் மக்களின் அவலங்களை இல்லாதொழிப்பதற்காக நாம் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம் எனினும் இந்நன்நாளில் தேசத்தின் வறுமை ஒழிபபிற்காக ஒன்றுபட்டு உழைப்போம்.

இன, மத, சாதி, வர்க்க வேறுபாடுகளால் பிரிவினைப்பட்டுநிற்கும் எம் மக்கள் இறைவனது குழந்தைகளாக ஒன்றிணைந்து புரிந்துணர்வுடனும் சமாதானமாகவும் வாழ முயலவேண்டும்.

போர் முடிவுற்ற பின்னரான அமைதிச் சூழலில் மனிதநேய உணர்வற்ற செயற்பாடுகள் கலாசார சீரழிவுகள் கொலை, கொள்ளை, பெண்கள் மீதான வன்முறைகள் எனத் தொடரும் சமூக வன்முறைகளை இல்லாதொழித்து நற்பிரஜைகளாக வாழ்வோம். சகல இனமக்களும் இந்நாட்டில் சமாதானமாகவும் சமத்துவமாகவும் வாழ நீதியும் நேர்மையும் நிலைநாட்டப்பட இறைவனிடம் மன்றாடுவோம்.

சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்)
யாழ். மாவட்ட நாடாளுமன்ற
உறுப்பின

# 9 நலன்புரி நிலையங்களில் 550 குடும்பங்கள் தஞ்சம்

(வவுனியா)

நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலையால் கடும் மழை பல பாகங்களிலும் பெய்து வருகின்றது. இந்த நிலையில் வவுனியாவில் கடந்த சனிக்கிழமை முதல் பெய்துவரும் அடை மழையால் மக்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கன மழையால் வவுனியாவின் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் 550 குடும்பங்கள் 9 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப் பட்டுள்ளதாக வவுனியா பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

மேலும் இந்த நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு வவுனியா பிரதேச செயலகத்தினால் சமைத்த உணவுகள் மூன்று வேளையும் வழங்கப்படுவதாகவும் அத்துடன் வவுனியா ஐயனார் சபையினாலும் சமைத்த உணவுகள் இம்மக்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும் இதர அத்தியாவசியப் பொருட்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாகப் பிரதேச செயலகத்தினால் மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வவுனியாவிலுள்ள குளங்களின் நீர் மட்டமும் வெகுவாக உயர்வடைந்துள்ளதுடன் சில குளங்களின் நீர்மட்டம் உயர்ந்து வீதிகளுக்கு குறுககாகப்பாய்கிறது.

அத்துடன் பாவற்குளத்தின் 6 வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதுடன் வவுனியா பூவரசங்குளம் ஊடான செட்டிகுளம் செல்லும் வீதியின் போக்குவரத்து இரண்டாவது நாளாக நேற்றும் முற்றாகத் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடரும் கனமழையினால் வவுனியாவில் அனைத்து இடங்களிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.(160)

# மோட்டார் சைக்கிள் விபத்து ஒருவர் படுகாயம்

யாழ். வைத்தியசாலை வீதியில் நேற்றுப் பிற்பகல் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று எதிரும் புதிருமாக மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இவ்விரு மோட்டார் சைக்கிள்களில் ஒன்று பலத்த சேதமடைந்துள்ளது. நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்ற இந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் வைத்தியசாலை வீதியூடாக யாழ். நகர் நோககிப் பயணித்த தென்பகுதியைச் சேர்ந்த யூவான் (வயது-29) என பவரே படுகாயடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்துடன் இந்த விபத்துக் குறித்து யாழ். போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளையும் மேற்கொண்டு குறித்த வீதியூடாக ஏற்பட்ட போக்குவரத்து நெருக்கடியையும் வழமைக்குக் கொண்டுவந்தனர். (பா)

# 4 பேருக்கு டெங்கு




(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றைய தினமும் நாலவர் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலையின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாயில் இருந்து இருவரும் சாவக்கட்டில் இருந்து இருவருமே இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

இவர்களுடன் இந்த மாதத்தில இதுவரை 93 பேரும் இவ்வருடத்தில் நேற்றுவரை 637 பேரும் டெங்குத்தொற்றுக்கு இலக்காகி சிகிக்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (பா)

## நம்பிக்கையில் மலரட்டும் நத்தார் வாழ்த்துக்கள்

நம்பிக்கை இழந்த மக்களுக்கு
நம்பிக்கை ஊட்டும் நற்செய்தி
நமக்காக பாலகன் யேசு பிறந்துள்ளார் - என
வயலில் இராக்காவல்காத்த இடயர்கள்
மூலம் அன்று பாருக்கு வெளிப்படுத்தப்பட்டது
எதிர்பார்த்திருந்த மக்களுக்கு நம்பிக்கை பிறந்தது
இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தும்
இனம், மதம், மொழி, நாடுகடந்து யாவரும்
கொண்டாடும் நத்தார் வாழ்த்துக்களை
நல்மனம் கொண்டு வாழ்த்துவோம்.

செ. யோசப்பாலா
செயலர், கத்தோலிக்க
கலை இலயக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.



அருட்பணி வி.பி.தனேந்திரா அடிகளாரின் குருத்துவத் திருப்பணியின் முதற்திருப்பலி நல்லூர் யாக்கோபு அலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது, அடிகளார் அருளுரை ஆற்றுவதையும், சமாதான வாழ்த்துக் கூறுவதனையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் காணலாம்.



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் அண்மையில் கச்சாய் அ.த.க.பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டபோது கழகப் பொருளாளர் லயன் ரீ.ரவீந்திரன் கற்றல் உபகரணப் பொதியை பாடசாலை அதிபரிடம் கையளிப்பதனையும், அருகில் உப அதிபர், லயன்ஸ் கழகத் தலைவர் கே.நடராசா, செயலாளர் டாக்டர் லயன் ஆர்.கந்தையா, சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் நிற்பதனையும் காணலாம்.

# தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் ஏற்கப்படும்

## - கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் மா அதிபர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கவும், முறைப்பாட்டுப் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கும் ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் மா அதிபர் எட்வேட் மகேந்திரா தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

இம்மாவட்டத்தில் தர்மபுரம் பிரதேசத்தில் பொலிஸ் நிலையம் ஒன்று இல்லாமையால் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

அத்துடன் இப்பகுதி பொது மக்களும் இப்பிரதேசத்தில் பொலிஸ் நிலையம் ஒன்று அவசியம் அமைக்கப்பட வேண்டும் என பலதடவை கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்தே இப்பிரதேசத்தில் தற்போது பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டு இயங்கிவருகிறது. இந்நிலையத்தினூடாக பொது மக்கள் தமது முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும். அத்துடன் தமது பிரதேசத்தில் இடம்பெறும் குற்றச் செயல்கள், களவு போன்ற சம்பவங்கள் குறித்தும் பொலிஸாருக்குத் தெரியப்படுத்த முடியும்.

இதேவேளை தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் தொலைத்தவர்களும் பொலிஸ் அறிக்கை பெறுவதற்கான முறைப்பாட்டுப் பிரதிகளையும், பெற்றுக் கொள்ள முடியும்.

முன்னர் இப்பிரதேச மக்கள் சாதாரண முறைப்பாடுகளுக்கும் பெரிய முறைப்பாடுகளுக்கும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கே சென்று வந்தனர். எனினும் தற்போது இப்பிரதேச மக்கள் சிறிய முறைப்பாடுகளை இப்பொலிஸ் நிலையத்தில் தெரிவிக்க முடியும்.

மேலும் பெரிய முறைப்பாடுகளை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தெரியப்படுத்த வேண்டும். தர்மபுரம் பிரதேச மக்கள் தமது முறைப்பாடுகளைத்தெரிவிக்கும் பட்சத்தில் அதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து பொலிஸார் மேற்கொள்வார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (கே)

## திருவெம்பாவை சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருவெம்பாவை சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாராந்தனை ஸ்ரீ தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆலய பிரதம குருவின் ஆசியுரை, தலைமையுரை என்பனவும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து திருவாசகம் என்னும் தேன் என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் கா.கமலநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## ஆறு மாடுகளை வெட்டியவர் பொலிஸாரிடம் வசமாக மாட்டினார்

(பூநகரி)

கிராஞ்சி காட்டுப்பகுதியில் 6 மாடுகளைக் களவாக வெட்டி இறைச்சியைக் கடத்த முற்பட்ட ஒருவரை நாச்சிக்குடா பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கடந்த சனிக்கிழமை இரவு கிராஞ்சி காட்டுப் பகுதியில் ஆறு மாடுகளைக் களவாக வெட்டி இறைச்சியை வேறு இடத்திற்குத் தனது உழவு இயந்திரத்தில் நகர்த்திய சமயம் நாச்சிக்குடா பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

தமக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்தை இரவு 1.30 மணிக்குச் சுற்றி வளைத்த வேளை 609 கிலோ நிறையுள்ள இறைச்சியுடன் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டதோடு, அவரது உழவு இயந்திரம், மற்றும் இறைச்சி என்பன கிளிநொச்சி மாவட்ட நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக நாச்சிக்குடா பொலிஸார் தெரிவித்தனர.

தனியொருவராக இந்த துணிகரச் செயலைச் செய்திருப்பதுடன் தனது சொந்த உழவு இயந்திரத்தில் இவற்றைக் கடத்தியிருப்பதும் அப்பகுதி மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (149)

## விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி தகுதியானவர்கள் நியமனம்

(அச்சுவேலி)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்காக விண்ணப்பித்த ஆசிரியர்களில் தகுதியானவர்களுக்கு அதற்கான நியமனக் கடிதங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இம்முறை புதிதாக பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு முதல் முறையாக விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு அதற்கான முறையான நியமனக் கடிதங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கொழும்பில் வைத்து வழங்கப்படவுள்ளது. இது தொடர்பாக உரிய ஆசிரியர்களுக்கு அது தொடர்பான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மேலும் பாடரீதியாக விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்காக அழைக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு மதிப்பீட்டுப் பணிகளை இலகுபடுத்துவதற்காக பரீட்சை வினாத்தாள்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன (03)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2012

உறுப்புரை - 22

சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில் ஒவ்வொருவரும் சமூகப் பாதுகாப்புக்கு உரிமையுடையவர். அத்துடன் தேசிய முயற்சி மூலமும் சர்வதேசிய நாட்டிடை ஒத்துழைப்பு மூலமும் ஒவ்வொரு நாட்டினதும் அமைப்பு முறைக்கும் வளங்களுக்கும் இயையவும் ஒவ்வொருவரும் தத்தம் மதிப்புக்கும் தத்தம் ஆளுமையைச் சுதந்திரமான முறையில் அபிவிருத்தி செய்வதற்கும் இன்றியமையாதவையாக வேண்டப்பெறும் பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகளைப் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

## ஆசிரியர் பற்றாக்குறையால் கல்வி நடவடிக்கைகள் பாதிப்பு


(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட கிளிநொச்சி கிராஞ்சி அ.த.க.பாடசாலையில் ஆசிரிய ஆளணியினருக்கு பற்றாக்குறை காணப்படுவதால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

தரம் 1 முதல் தரம் 9 வரையான வகுப்புக்களைக் கொண்ட இப்பாட்சாலையில் 90 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்நிலையில் 18 ஆசிரியர்கள் தேவையாக உள்ள நிலையில், 9 ஆசிரியர்களே சேவையாற்ற வருவதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய ஆசிரியர் பற்றாக்குறையினால் முக்கிய பாடங்களை மாணவர்கள் கற்க முடியாத நிலை காரணப்படுவதாகவும், குறிப்பாக பொதுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இதனால் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே மாணவர்களின் கற்றலை கருத்திற்கொண்டு அடுத்த வருடம் முதலாம் தவணையில் இருந்து ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு மாணவர்களும் பெற்றோர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)



திசைகாட்டியின் சகநிறுவனமாகிய முத்துமணி காமன்ஸ் திறப்புவிழா நிகழ்வில் ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும், சட்டத்தரணி வி.எஸ்.நிறஞ்சன் உரையாற்றுவதையும், அருகில் நிறுவன தலைவர் எஸ்.செல்வராஜா, உபதலைவி பிரவீனா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (54)

## பாதை சேவை விரைவில்

நயினாதீவு குறிகட்டுவானுக்கிடையில் பெரிசேவையை (பாதை) ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நயினாதீவிலிருந்து குறிகட்டுவானுக்கும், குறிகட்டுவானில் இருந்து நயினாதீவுக்கும் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு படகு பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் இதனால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

ஒவ்வொரு தடவையும் படகின் மூலமே மக்கள் பொருட்களை ஏற்றி இறக்கிவந்த நிலையில் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டால் வாகனங்களை கடல்வழியாக கொண்டு செல்ல முடியும். இதனைக் கருத்தில் கொண்டு இச்சேவை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இச்சேவை எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (175)

மனித முயற்சியால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவும் செய்துபார், ஒவ்வொரு தடவையும் உனக்குத் தோன்றுவது 'கடவுள் இருக்கிறார்' என்பதே.
- பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இனிய நத்தார் வாழ்த்துக்கள்!

இன்று கிறிஸ்மஸ். 2011 வருடங்களுக்கு முன் இயேசு கிறிஸ்து போன்ற ஒரு புனிதர் இந்த உலகில் பிறந்து வாழ்ந்தார் என்ற நினைப்பே நம்மையெல்லாம் பரவசப்படுத்தக் கூடியது. அந்த மகிழ்ச்சியையே நத்தார் தினமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

யாராவது உனது ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டு என்கிற அன்பையும் பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் நாம் வாழ்வதற்கு வேண்டிய ஒரு வழிகாட்டுதலாய்த் தந்தார் இயேசு. இன்று நமது வாழ்வின் மீட்சிக்கும் இந்த மந்திரமே அவசியம் என்று நாம் புரிந்து கொள்கிறோம். வன்முறை, கோபம், வெறுப்பு, பழியுணர்ச்சி போன்றவற்றை மெல்ல விலக்கி வைப்பதன் மூலமே இன்றைய சூழலை நாம் கடக்கலாம் என்பதையும் புரிந்து கொள்கிறோம்.

வெறுப்பையும் வன்முறையுணர்வையும் துறப்பது அவ்வளவு இலகுவானதில்லை. நாமே முயன்றுதான் நமக்குள்ளிருக்கும் வன்முறையை அடக்கிவிட்டுப் பதிலாக கருணையைப் பொங்கவிடவேண்டும் என்கிறார் ஜே.கே. நமது நல்ல குணங்களை விட்டுவிடாமல், மற்றவர்களின் சீண்டல்களுக்குப் பதற்றப்பட்டுவிடாமல் நம்மிடம் விவேகத்தை உண்டாக்கிக் கொள்வோமானால், நம் நிமிர்வை யாரும் தடுக்க முடியாது. நல்லதை நோக்கி நம்மோடு மற்றவர்களும் நடப்பதற்கு இணைவர்.

நம் மனங்களுக்குள்ளேயே கடவுள்தன்மையும் சாத்தானின் அழுக்குகளும் உண்டு. இரண்டையும் அவதானித்து எதைச் செயல்பட விடுவதென்பதில் நாம் ஒவ்வொரு கணமும் விழிப்புடனிருக்க வேண்டியிருக்கிறது. வெறும் உணர்ச்சிகர போதையில் நடந்துகொண்டால், நம் வாழ்வையும் உலகையும் சாத்தான்வசம் ஒப்படைத்துவிட்டுத் திட்டிக் கொண்டிருப்பதாகவே இருக்கும்.

நாம் களைய விரும்பாமல் நம்முடனேயே சுமந்து வந்து கொண்டிருக்கும் ஒரு வில்லங்கம் என்னவென்றால், நமக்குத் திருப்தி தரக்கூடிய பொய்கள் கிடைத்துவிட்டால், உண்மையைத் தேடுவதை ஒத்திப் போட்டுவிடுகிறோம் அல்லது தேடாமலே விட்டுவிடுகிறோம். உண்மையை நேர்கொண்டு பார்க்கக் கூசி, பொய்யான கனவுகளில் திளைத்திருப்பதே நம் பெருமளவு அவலங்களுக்குக் காரணம் என்று தோன்றுகிறது.

நமது வீழ்ச்சிகளைக் கூட பெருமிதப் பேச்சுகளுக்குள் மறைத்து மேலும் மேலும் சரிந்துகொண்டிருக்கிறோம். வாயளவிலான சவால்களையும் சவடால்களையும் ஏந்திக் குடித்துக் கிறங்குகிறோம். நம் அவலங்களை நிறுத்தும் மார்க்கத்தைக் காண மறுத்து வெறும் ரோச அலையில் மிதந்து போய்க்கொண்டிருக்கிறோம். வெறுப்பையும் பகையையும் நிரப்பி வைத்திருக்கும் நெஞ்சினராக இருந்து நாம் சாதிக்க ஒன்றுமில்லை.

நாம் கடவுளின் குழந்தைகளாக இருக்கும்போது கவிஞர்களாகவும், காதல்நெஞ்சம் கொண்டவர்களாகவும், சிந்தனையாளர்களாகவும், அன்பு நிறைந்தவர்களாகவும், அடுத்தவர் துயரையும் அறிந்து விலக்கப் பாடுபடுபவர்களாகவும் இருக்கிறோம். சாத்தானின் கைப்பாவையாக ஆகும்போதோ சோம்பேறிகளாகவும், பொய்யர்களாகவும், பிறரை விலக்குபவர்களாகவும், வன்முறையாளர்களாகவும் மாறிவிடுகிறோம் என்றே விவிலியக் கதை கூறுகிறது.

மனிதர்கள் தேவர்களாக உயரவும், மண்ணில் வானம் தென்படவும், மானுடம் வென்று வாழ்க்கையைக் கொண்டாடவும் வழிகள் இங்கு உண்டு. நம் எல்லோர்க்கும் தெளிவாகத் தெரிந்தவையே அந்த வழிகள்.

இதோ, அன்புமயமான புனிதர் கிறிஸ்து பிறந்த இந்த நன்னாளிலும் ஒருமுறை நம்மை நாமே கேட்டுக் கொள்ளலாம். என்ன செய்யப் போகிறோம் இந்த வாழ்க்கையை?

எல்லோர்க்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்!

- ஆசிரியர்

# தேசிய கொள்கைக்கு மாறாக வடக்கில் ஆசிரிய இடமாற்றங்கள்

## — இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம் —

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய இடமாற்றங்களை தென்பகுதிகளில் திணிக்கமுடியாதவர்கள் வடபுலத்தில் அதனை அதிகாரத்தோரணையில் திணிக்க நினைப்பதனை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நீண்டகாலத் துயரங்களுக்குப் பின்னர் நிம்மதியாக வாழ்வதற்கும், தொழில் புரிவதற்கும் ஆசிரியர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்து, மாணவர்களின் கல்வியைச் சீர்படுத்த நினைக்கும் போது அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற தேசிய இடமாற்றம் செய்வதனை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.

இது மாணவர்களின் கல்வியை ஒட்டுமொத்தமாக அழிக்கும் செயலாகும். நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கு கல்வி அமைச்சு எடுத்துவந்த முயற்சிகள் எதுவும் பயனளிக்காத நிலையிலும், தென்பகுதியில் உள்ள பாடசாலைகளில் இடமாற்றம் கோராத ஆசிரியர்களுக்கு அவர்களின் நியமனக்கடிதங்களின் தன்மைகளையெல்லாம் விலக்கி இடமாற்றம் செய்வது பொருத்தமானதல்ல. இன்று வரை 2013ஆம் ஆண்டிற்கான இடமாற்றம் பற்றி எந்தவொரு ஆசிரியருக்கும் எழுத்து மூலமான அறிவித்தல் வழங்கப்படாத நிலையில் இடமாற்றத்தை இரத்துச்செய்தல் என்பது வினோதமாக இருக்கின்றது. இடம்மாற்றம் வழங்கப்பட்டால் மட்டுமே அதுபற்றிப்பேசமுடியும். இடமாற்றம் வழங்காமல் இரத்துசெய்தல் என்பது கேலிக்கூத்தாக இருக்கின்றது. என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பல்கலை விரிவுரையாளரின் கொடுப்பனவுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

2013ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு கல்வி மற்றும் ஆய்வுக் கொடுப்பனவுகளை 25 முதல் 30 வீதத்தால் அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தினர் நடத்திய 100 நாள் வேலை நிறுத்தத்தின் பின்னர் அரசாங்கத்துக்கும் - பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கப் பிரதிநிதிகள் பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட இத்தீர்மானம் குறித்து உயர் கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான கொடுப்பனவு அதிகரிப்பு வழங்கியமை குறித்து இலங்கை சுதந்திர பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தின் செயலாளர் டாக்டர் அஜித் திஸாநாயக்க அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

கல்வி - உயர்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி ஆகிய துறைகளில் எதிர்வரும் காலங்களில் அரசாங்கம் பெருமளவு முதலீடுகளைச் செய்யவுள்ள நிலையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் ஏனைய துறைசார் வல்லுனர்களும் அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என எதிர்பார்ப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்கள் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டமானது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோரின் தலையீட்டையடுத்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் முன்னர் வருமானமாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் இதனை வருமானமாகக் கணக்கெடுப்பதற்கு தற்பொழுது தீர்மானிக்கப்பட்டிருப்பதுடன், கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்படவுள்ளன.

புதிய மாற்றங்களுக்கு அமைய விரிவுரையாளருக்கு 60 வீதமான அதிகரிப்பும் சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு 75 வீத அதிகரிப்பும் இரண்டாம் தர சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு 80 வீத அதிகரிப்பும் பேராசிரியர்ளுக்கு 85 வீத அதிகரிப்பும் வழங்கப்படவுள்ளன.

இந்த அதிகரிப்பின் 50 வீதம் ஜனவரி மாதம் முதலும் எஞ்சிய அதிகரிப்பு யூன் மாதத்திலிருந்தும் வழங்கப்பட இருப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு விடுத்திருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடிப்படைச் சம்பளத்துக்கு சமனாக ஜனவரி முதலாம் திகதியிலிருந்து கொடுப்பனவுகள் 25 வீதம் முதல் 35 வீதம் அதிகரித்து வழங்கப்பட இருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தான்விழுந்த குழியில் நீதியரசரையும் விழுத்த முயல்கிறார் பொன்சேகா

## தென்மாகாண முதல்வர் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா, தான் விழுந்த குழியில், பிரதம நீதியரசரையும் தள்ள முயற்சிப்பதாக தென் மாகாண முதலமைச்சர் விஜேயலால் டி சில்வா தெரிவித்துள்ளார். அம்பலாங்கொடவில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

பொன்சேகா போர் வெற்றிக்காக தனது பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றினார். முழு நாட்டு மக்களின் கௌரவத்திற்கும் பாத்திரமானார். ஐக்கிய தேசியக்கட்சியும், ஜே.வி.பியும் அவரை கையில் பிடித்து அரசியலுக்குள் அழைத்து வந்தன. 2009ஆம் ஆண்டு அவர் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். தற்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை இரத்துச் செய்வதாகக் கூறி அவர் அந்தத் தேர்தலில் போட்டியிட்டார். எனினும் 19 இலட்சம் வாக்குகளினால் அவர் தோல்வியடைந்தார்.

இந்த நிலையில் சரத் பொன்சேகாவை அரசியல் கட்சிகள் அநாதையாக்கி விட்டனர். அவர் சிறையில் இருந்த போது, அனோமா பொன்சேகா, கோட்டை தொடருந்து நிலையத்திற்கு எதிரிலும், லிப்டன் சுற்று வட்டத்திலும் ஆர்ப்பாட்டம் நடத்த காரணங்கள் இருந்தன. தற்போது அதுவும் இல்லை. தற்போது அரசியல் அநாதையாகியுள்ள சரத் பொன்சேகா, பிரதம நீதியரசரையும் அந்த நிலைமைக்குள் தள்ளவே முயற்சித்து வருகிறார் என அவர் கூறியுள்ளார்.

# நித்திரைத் தூக்கத்தில் சாரதி; இராணுவ சிப்பாய் உயிரிழந்தார்

(வவுனியா)

வவுனியா, கனகராயன் குளத்திலிருந்து 215 மீற்றர் தொலைவில் உள்ள வீதியோர சேதனைச்சாவடியுடன் லொறி ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தின் போது இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ள அதேவேளை மற்றுமொரு சிப்பாய் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை 4.15 மணியளவில் இவ் விபத்து இடம் பெற்றுள்ளது. லொறியின் சாரதி நித்திரை மயக்கத்தில் வாகனத்தை செலுத்தியமையே விபத்திற்கான காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். குருநாகலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஓடு ஏற்றிச் சென்ற லொறியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.


# நல்லிணக்க அரசியலும் இனவாத அரசியலும்

■ தேவன் (கனடா) கட்டுரையிலிருந்து

**30 வருடத்திற்கு முன்பு இருந்த வாழ்வியல், மனிதம், ஐக்கியம், ஒற்றுமையில் வேற்றுமை போன்ற உயர்ந்த பண்புகளை எமது முதிய தலைமுறை கற்றுக் கொடுத்தது. ஈழப் போரானது சமூகக் கட்டமைப்பை ஆட்டம் காணச் செய்ததுடன், தமிழர்களில் யாரை நம்புவது, யாரை நம்பக்கூடாது என்பது போன்ற சிக்கலான நிலைமையையும் தோற்றுவித்துள்ளது. யுத்தம் முடிந்து 3 வருடங்களுக்கு மேலாகியும் தமிழ் சமூகத்தில் எந்தவித சிந்தனை மாற்றமும் உருவாகாதது மிகவும் அவநம்பிக்கையையும் அதிர்ச்சியையும் தருகிறது.**

யுத்தம், இடப்பெயர்வு, அகதி வாழ்வு எப்படி ஒரு சமூகத்தின் அத்திபாரத்தை தகர்க்கும், அதன் குறுக்கு வெட்டுத் தோற்றத்தை எப்படி சுனாமி போல சுவடே இல்லாமல் அழிக்கும், மனிதத்தைச் சிதைக்கும் அல்லது விலை பேசும், சுரண்டும் என்பதற்கு, நம் தேசத்தின் 30 வருட உள்நாட்டுப் போர் மிகப் பெரிய உதாரணமாக இருக்கிறது.

போரானது மனிதனை மிருகமாக்குகிறது, மேன்மையான உணர்வுகளைச் சிதைக்கிறது, தார்மீகரீதியான வாழ்வியலை சேதப்படுத்துகிறது. இதற்கு அனுகூலமாக சக மனிதனை



**தமிழீழப் போரையும், இறுதி ஈழ யுத்தத்தையும் ஆதரித்து உசுப்பேத்தின தமிழ் சமூகத்தின் பெரும்பான்மையான தரப்பினருக்கு ஐ.நாவின் இரகசிய அறிக்கை பற்றியோ, மனித உரிமை பற்றியோ கதைப்பதற்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் கிடையாது.**

நம்பாத, சகோதர இன-சமூக மக்களுக்கு எதிராக இன. மத. விரோதமான, இனவாதமான உணர்ச்சிகரமான பிரச்சாரங்களை இனவாதஊடகங்கள் முடுக்கி விடுகின்றன. இத்தகைய அழிவுப் பாதைக்கு ஒவ்வொரு சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இனவாத, குறுகிய சிந்தனை உள்ள அரசியல் தலைமைகள் தீனி போடுகின்றன.

தனிநாட்டுக்கான ஈழப்போர் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு நமது சமூகத்தின் கட்டமைப்பு எப்படி இருந்தது என்பதை நினைக்கும் போது மனம் ஏங்குகிறது. 30 வருடத்திற்கு முன்பு இருந்த வாழ்வியல், மனிதம், ஐக்கியம், ஒற்றுமையில் வேற்றுமை போன்ற உயர்ந்த பண்புகளை எமது முதிய தலைமுறை கற்றுக் கொடுத்தது. இன்றுள்ள சூழ்நிலையில் அந்த வாழ்க்கை மீண்டும் வருமா என்பது சந்தேகமே. ஈழப் போரானது சமூகக் கட்டமைப்பை ஆட்டம் காணச் செய்ததுடன், தமிழர்களில் யாரை நம்புவது, யாரை நம்பக்கூடாது என்பது போன்ற சிக்கலான நிலைமையையும் தோற்றுவித்துள்ளது.

யுத்தம் முடிந்து 3 வருடங்களுக்கு மேலாகியும் தமிழ் சமூகத்தில் எந்தவித சிந்தனை மாற்றமும் உருவாகாதது மிகவும் அவநம்பிக்கையையும் அதிர்ச்சியையும் தருகிறது. அத்துடன் தமிழ் சமூகத்தின் பின்னடைவுக்கும் அழிவுக்கும் காரணமாக இருந்த த.தே.கூட்டமைப்பின் 13 நாடாளுமன்றப் பிரதிநிதிகளும், புலம்பெயர் நாடுகளில் கனடிய தமிழ் காங்கிரஸ், உலகத் தமிழர் பேரவை மற்றும் புலிப் பினாமி ஊடகங்கள், அமைப்புகள் என்பனவும் சர்வதேச அரங்கில் புனிதர்கள் போல் நடிப்பதும், மனித உரிமை, போர்க் குற்றம், பொறுப்புக் கூறல், யுத்த விசாரணை பற்றிக் கதைப்பதும், அறம் சார்ந்து சிந்திப்போரை அதிர்ச்சியில் உறைய வைக்கிறது.

தமிழீழப் போரையும், இறுதி ஈழ யுத்தத்தையும் ஆதரித்து உசுப்பேத்தின தமிழ் சமூகத்தின் பெரும்பான்மையான தரப்பினருக்கு ஐ.நாவின் இரகசிய அறிக்கை பற்றியோ, மனித உரிமை பற்றியோ கதைப்பதற்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் கிடையாது.

இறுதி யுத்தம் நடந்த காலத்தில் நடந்த சம்பவங்களை மீண்டும் வலியுறுத்த வேண்டி உள்ளது. மாவிலாறு அணையைப் பூட்டியது, ஐரோப்பிய யூனியன் போர்க் கண்காணிப்புக் குழுவை வெளியேற்றியது, சமாதான காலத்தில் அதிகளவிலான யுத்த மீறல்களில் ஈடுபட்டது, இறுதி யுத்தத்தைத் தன்னிச்சையாக ஆரம்பித்தது, 48 மணி நேர யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தாதது என, இவைகள் அனைத்தையும் புலிகளே செய்தார்கள். இதற்குப் பின்பலமாக இருந்தவர்கள் த.தே.கூட்டமைப்பினரும், அவர்களுக்கு ஆதரவான ஊடகங்களும், அமைப்புகளும்தான் என்பதை வரலாறு பதிவு செய்திருக்கிறது.

போருக்குப் பின்பான தேசத்தையும், பல்லின சமூகங்களையும், தேசிய ஐக்கியத்துடன், இணக்கப்பாட்டுடன் வழி நடாத்துவதற்கு முதிர்ச்சியான, ஆளுமையான, இனவாதமற்ற அரசியல் தலைவர்கள், கட்சிகள் உருவாக்கப்பட வேண்டும்.

ஆனால் யதார்த்தம் என்னவென்றால், யுத்தத்திற்குப் பின்பான இலங்கையை வழி நடாத்துவதற்கு தற்போது உள்ள அரசியல் கட்சிகளைக் கவனத்தில் எடுத்துக் கொண்டால், அநேகமான தலைமைகள் இனவாதச் சகதிக்குள் மூழ்கித் தமது இருப்புக்காக மக்களைப் பிழையான பாதையில் வழி நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சில தலைவர்கள் சிங்களத் தரப்பிலும், தமிழ்த் தரப்பிலும் தேசிய நல்லிணக்கத்தை முன்னெடுக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இவர்களது முயற்சி இனவாத அலைக்குத் தாக்குப் பிடிக்க முடியாததாகவே இருக்கிறது.

உதாரணத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பை எடுத்துக் கொண்டால், இதன் அரசியல் செயல்பாடு குறை கூறுதல், அறிக்கை விடுதல், உசுப்பேத்தல், உணர்ச்சியூட்டல், இனவாதத்தைக் கிளப்புதல், மேற்குலக அடிவருடிகளாகச் செயற்படுதல், நாடாளுமன்றச் சலுகைகளை அனுபவித்தல், உலகை வலம் வருதல், புலம்பெயர் புலி ஆதரவு மாநாடுகளில் கலந்து கொள்ளல் என்பனவே அக்கட்சி செய்யும் அரசியலாக இருக்கிறது.

தற்போது இலங்கையில் காணப்படும் இனவாத அரசியல் கட்டமைப்புக்குள் இருந்து தேசிய நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாடு, இணக்கப்பாடு போன்ற விடயங்களை முன்னெடுப்பது சிரமமான ஒரு காரியமாகவும், 'கல்லில் நார் உரிப்பது' போன்ற செயலாகவும் காணப்படுகின்றது. ஏனெனில் சிங்களத் தரப்பிலும், தமிழ்த் தரப்பிலும் உள்ள இனவாத அரசியல் கட்சித் தலைவர்கள் பழிக்குப் பழி, வன்மத்துக்கு வன்மம், இனவாத தேசியவாத வெறி போன்ற விடயங்களையே அறிக்கைகளிலும் பேச்சிலும் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இலங்கையைப் பொறுத்த வரையில், ஜனநாயகத்தை யார் பாவிக்கிறார்கள் என்றால், இனவாத சக்திகளும், ஊழல்வாதிகளும், அரசியல் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறவர்களுமே தமது சுயநலத்துக்காக, இருப்புக்காக தேசத்தைக் கொள்ளையடித்து மக்களைத் தவறாக வழி நடாத்துகிறார்கள். இத்தகைய செயற்பாட்டில் சிங்களத் தரப்புக்கும் தமிழ் தரப்புக்கும் பெரிய வித்தியாசம் இல்லை என்பதுடன், ஒன்றுக்கு ஒன்று உதவியும் புரிகிறது. இனவாதத்தைக் கக்கும் தலைவர்களாகட்டும், அரசியல் கட்சிகளாகட்டும், முரண்பாடுகளை வளர்ப்பதிலேயே அக்கறை காட்டுகிறார்கள்.

தேசம் கண்ட 3 ஆயுதக் கிளர்ச்சிகளில் எவ்வளவு வளங்களை நாடு இழந்துள்ளது? எவ்வளவு அப்பாவி மக்களின் உயிரைப் பலி எடுத்துள்ளது? இந்த அழிவுகள் எல்லாம் எதனால் ஏற்பட்டது என்பதை எந்த அரசியல்வாதியும் ஆற அமர இருந்து சிந்திக்கத் தயாராக இல்லை. குறைந்தபட்சம் கற்றறிந்த பாடங்கள் ஊடாகசிபார்சு செய்த இணக்கப்பாடு. தேச நல்லிணக்கம், அரசியல் தீர்வு போன்ற விடயங்கள் கூட அரசியல்வாதிகளால் உதாசீனப்படுத்தப்பட்டு காலாவதியாகி வருவது போல் தெரிகிறது.

புலிகளின் பினாமியாக, முகவர்களாக, தமிழ் மக்களின் நந்திக்கடல் வரையான அழிவுகளுக்கு காரணமாக இருந்தவர்கள்தான், உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் பதவி, பண மற்றும் ஊடக பலத்தால் முன்னணியிலும் பலத்திலும் திகழ்கிறார்கள்.

அவர்களிடம் பண பலமும், ஊடக பலமும் இருப்பதால், சர்வதேச சமூகமும் அவர்களிடம்தான் அரசியல் தொடர்புகளை, உறவுகளைத் தொடர்ந்து நடாத்தி வருகிறது. இது ஒரு தவறான முன்னுதாரணம் என்பதுடன், இலங்கைத் தீவுக்குள் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும், தேசிய நல்லிணக்கத்தையும், அரசியல் தீர்வை எட்டுவதற்கும் இத்தகைய அணுகுமுறை உதவப் போவதில்லை என்பதை உலகம் உணரத் தவறிவிட்டது.

(17ஆம் பக்கம் பார்க்க)

# காணாமற்போனவர்கள் தொடர்பாக சர்வதேச அமைப்புகளிடம் முறையிட கூடாது

## - படையினர் எச்சரித்ததாக பி.பி.சி. தெரிவிப்பு



(கொழும்பு)

தங்களுடைய உறவினர்கள் மற்றும் அக்கம் பக்கத்தைச் சேர்ந்த யாராவது காணாமற் போய்விட்டால் அவர்கள் தொடர்பில் சர்வதேச அமைப்புகளிடம் முறையிடக்கூடாது என படையினர் எச்சரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பி.பி.சி. செய்திச் சேவை வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் கிராமத்தைச்சேர்ந்த மக்கள் பாதுகாப்புத் தரப்பினரால் இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேசங்களில் கடந்த காலங்களில் கடத்தப்பட்டு காணாமறபோனவர்களின் உறவினர்கள் ஐ.நா உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளிடமோ அல்லது வேறு வெளிநாட்டு நிறுவனங்களிடமோ முறைப்பாடு செய்யக்கூடாது என்றும் படையினர் எச்சரித்துவிட்டுச் சென்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தமக்கு முறைப்பாடு செய்துள்ளதாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக குரல்கொடுக்கின்ற அமைப்பொன்றின் தலைவி பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

தம்பலகாமத்துக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் இராணுவ வாகனமொன்றில் சென்ற நபர்கள், விடுதலைப் புலிகளோடு தொடர்புடைய எவராவது அங்கு வசிக்கிறார்களா என்று தேடிச் சென்றதாகவும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் தலைவி கூறினார்.

மக்கள் தமது காணாமற்போன உறவினர்கள் தொடர்பில் வெளிநாட்டு அமைப்புகளிடம் முறையிடக்கூடாது என்றும் படையினர் எச்சரித்துச் சென்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமது கணவன்மாரும் பிள்ளைகளும் கடத்தப்பட்டபோது அவரகளை விடுவிப்பதற்காக தம்மிடம் கப்பம் பறித்த பலரும் எந்த விதமான பிரச்சினைகளுமின்றி தமது பிரதேசங்களில் நடமாடிவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடத்தப்பட்டு காணாமற் போனவர்களின் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் மிகவும் சிரமப்படுவதாகவும் அந்தக் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க அரசாங்க அதிகாரிகள் முன்வர வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கூறுகின்றன.

2008 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் போர் உச்சத்தில் இருந்தபோது, கடத்தப்பட்டு காணாமற் போனவர்களின் நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் தமது அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தம்பலகாமம் பகுதியில் மக்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சம்பவம் பற்றி படைத் தரப்பின் கருத்துக்கள் கிடைக்கப்பெறவில்லை என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெலிக்கடை சிறையில் சுழல்முறை துப்பாக்கிகள்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து T56 மற்றும் CZ 58 துப்பாக்கிகளுக்கு பதிலாக இயக்குவதற்கு (Repeater) சுழல்முறை துப்பாக்கிகளை வைத்திருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஜி. எஸ். விதானகே இதனை குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலையில் வன்முறைகள் ஏற்படும் போது கைதிகள் T56 ரக துப்பாக்கிகளைப் பயன்படுத்தினால் அதன் மூலம் பாரிய சேதங்கள் ஏற்படக்கூடும்.

எனினும் சுழல்முறை துப்பாக்கியின் மூலம் ஒரேதடவையில் 6 ரவைகளை மாத்திரமே வெளியாக்கமுடியும் என்பதன் காரணமாக பாதிப்புக்கள் குறைவாக இருக்கும் என்ற அடிப்படையிலேயே அவற்றை சிறைச்சாலையில் வைத்திருக்க தீமானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுழல்முறை துப்பாக்கியின் மூலம் 25 மீற்றர் தூரத்துக்கே ரவைகளை செலுத்தமுடியும்.

எனினும் T56 ரக துப்பாக்கியின் மூலம் 800 மீற்றருக்கு ரவைகளை செலுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெரிவுக்குழு, சபாநாயகருக்கு அறிவிப்பே விடுக்கப்பட்டது

### என்கிறார் சுமந்திரன் எம்.பி.



(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கும் சபாநாயகருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை விடுக்கவில்லை. அறிவிப்பொன்றையே விடுத்துள்ளதாக எதிரணிகள் தெரிவித்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் மைக்கல் பெரேரா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. எம்.சுமந்திரன் ஆகியோரே மேற்கண்டவாறு தெரிவித்தனர். அங்கு சுமந்திரன் எம்.பி. கருத்து தெரிவிக்கையில்,

சட்டத்தரணியான பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

தெரிவுக்குழுவுக்கும் சபாநாயகருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை விடுக்கவில்லை. அழைப்பொன்றையே விடுத்துள்ளது. அதனையும் அவமதிக்காது செயற்படல்வேண்டும எனத் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஜோசப் மைக்கல் பெரேரா எம்.பி. கூறுகையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவிப்பை மதிக்காவிடின் தெரிவுக்குழு தொடர்பில் நீதிமன்றம் ஒரு பக்கசார்பான தீர்ப்பை எடுக்க வேண்டிவரும். நாடாளுமன்றமும், சட்டவாக்கமும் இறையாண்மை மிக்கதல்ல மக்களே இறையாணமை மிக்கவர்கள் என்றார்.

## திகதியை மாற்றி கடிதம் எழுத ரணிலின் மூளை விசேடமானது

### என்கிறார் ராஜித



ஐக்கிய் தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் நான் நீண்ட நாட்கள் அரசியல் செய்துள்ளேன் அவருடைய "மூளை" விசேடமானது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குற்றப்பிரேரணை தொடர்பில் பொதுநலவாய மாநாட்டிற்கு கடிதம் எழுதப்போவதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. கட்சியை வெற்றிகொள்ளச்செய்ய தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு அவருக்கு இருக்கும் ஆளுமை போதாது.

ஆனால், கடிதம் எழுதுவதில் அவருடைய மூளை விசேடமானது. பொதுநலவாய மாநாட்டிற்கு திகதியை மாற்றி கடிதத்தையும் எழுதிவிட்டு கடிதம் எழுதப்போவதாக தற்போது தெரிவிக்கின்றனர்.

திகதியை மாற்றி கடிதம் எழுதுவதற்கு அவருடைய "மூளையே" சிறந்தது என்றார்.

## நட்டத்தில் இயங்கிவரும் 34 அரச நிறுவனங்கள்

(கொழும்பு)

34 அரச நிறுவனங்கள். நட்டத்தில் இயங் குகின்றமை புதிய கணக்காய்வொன்றில் தெரியவந்துள்ளது.

கடந்த வருடத்திற்குரிய கணக்காய்வு அறிக்கைகளைத் தயாரிக்கும் நடவடிக்கையின்போது இந்த விடயம் தெரியவந்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் எச்.ஏ.எஸ். சமரவீர கூறியுள்ளார்.


குறித்த நிறுவனங்களில் 52 ஆயிரத்து 178 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஆகிய நிறுவனங்களே நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களில் முன்னிலை வகிக்கின்றன.

குறித்த அரசநிறுவனங்கள் தொடர்ந்தும் நட்டமடைவதை தடுப்பதற்காக பல்வேறு பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

முகாமைத்துவ சீர்கேடு மற்றும் வருடாந்த இலக்குகள் பூர்த்தி செய்யப்படாமை ஆகிய காரணங்களே அரச நிறுவனங்களில் நட்டம் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்கள் என கணக்காய்வாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சி திருத்தச்சட்டம் மறு சீரமைப்பு குழு நியமனம்



புதிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டம் தொடர்பில் ஆராய்வதற்கான தேசிய தொகுதி மறுசீரமைப்பு குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஐந்து பேர் கொண்ட இந்தக் குழுவை, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஏ.எல். எம்.அதாவுல்லா நியமித்துள்ளார்.

ஜெயலத் ஆர்.வி. திஸாநாயக்க தலைமையிலான இந்த குழுவில், வி.எச்.ஜி. பிரேமசிறி, விமல் ரூபசிங்க, ஏ.எம்.நெஹ்யா மற்றும் தேவராஜ் ஆதவன் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் சீர்த்திருத்தப்பட்ட உள்ளூராட்சி சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது.

இதனை சக்திமயப்படுத்தும் வகையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சட்ட மூலத்தின் கீழ் விருப்பு வாக்குமுறைமை இரத்துச் செய்யப்படுகிறது. இந்த நிலையில் இந்த சட்ட மூலம் தொடர்பில் பொது மக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் கருத்துக்களைக் கோரி, இந்தக் குழு அறிக்கை தயாரிக்கவுள்ளது.

இந்த அறிக்கை அடுத்த ஆண்டு மே மாதம் 31ஆம் திகதிக்கு முனனர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

## அனர்த்தத்தால் சேதமடைந்த சொத்து விபரங்கள் திரட்டல்

சீரற்ற காலநிலை காரணமாக அனர்த்தத்திற்கு உள்ளான பகுதிகளின் சொத்துக்களின் இழப்பீடு தொடர்பிலான அறிக்கையைப் பெற்றுக்கொள்ள அனர்த்த முகாமைத்துவ அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான ஆய்வுப் பணிகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்காக 50 ஆயிரம் ரூபாவும், முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு ஒரு இலட்சம் ரூபாவும் நட்டஈடாக வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைசசர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சீரற்ற காலநிலை காரணமாக 5 மாவட்டங்களில் 25 ஆயிரத்து 418 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் 128 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உலர்உணவு உள்ளிட்ட ஏனைய வசதிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கடந்த சில தினங்களாக ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக 42 பேர் பலியாகினர்.

ஒன்பது பேர் காணாமற் போயுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லால் குமார தெரிவித்தார்.

# பின்தங்கிய அம்பிகைநகர் கிராமத்தின் அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படும்



(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் சகலவிதமான பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எமது தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தீவக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வேலணை - அம்பிகைநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க கடலுணவு கொள்வனவு நிலைய திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடற்றொழிலை நம்பியுள்ள மக்கள் அதிகமாக வாழ்கின்ற இப்பிரதேசம் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது. எனவே இக்கிராமத்தின் சகல அடிப்படைத் தேவைகளையும் விரைவில் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்படும்.

யுத்தம் ஓய்ந்த சுதந்திரமான சூழலில் அழிவடைந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கான செயற்பாடுகளை துரிதமாக செயற்படுத்தி வருகின்றோம். அவ்வாறே இப்பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த காணியற்ற மக்களின் வீடமைப்பு தொடர்பிலான பிரச்சினைக்கான தீர்வும் வெகு விரைவில் பெற்றுத்தரப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதில் சேவாலங்கா நிறுவன அனுசரனையில் UNHCR நிறுவனத்தின் 9 இலட்சத்து 65ஆயிரம் ரூபா நிதிஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட கடலுணவு கொள்வனவு நிலையத்தை நாடாளுமன்ற உறுப்பினர் வைபவரீதியாக திறந்து வைத்தார். தொடர்ந்து கொள்வனவு நிலைய பெயர்ப்பலகையினை வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஸன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து, கருத்துரைகளை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி, வேலணை பிரதேச சபை தவிசாளரும், ஈ.பி.டி.பி.யின் வேலணை பிரதேச இணைப்பாளருமான சின்னையா சிவராசா (போல்), சேவாலங்கா திட்ட இணைப்பாளர் நகுலேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில், கிராம அலுவலர், கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# க.பொ.த. (சா/த) பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீடு

(அச்சுவேலி)

நடைபெற்று முடிந்த கல்விப் பொதுத் தரா'தர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஜனவரி 08 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

நாடு பூராகவும் நடைபெறவுள்ள இப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் யாழ்ப்பாணத்திலும் மூன்று நிலையங்களில் நடைபெறவுள்ளது. இதற்கமைய யாழ்ப்பாணத்தில் யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, நெல்லியடி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகள் மதிப்பீட்டு நிலையங்களாக செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (03)

# ஊறணி நன்னீரூற்று சுற்றுலா தலமாக விஸ்தரிப்பு



(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ள ஊறணி நன்னீரூற்றானது, இந்தப் பிரதேச மக்களுக்கு மட்டுமல்லாது, சகல சுற்றுலாப் பயணிகளையும் யாத்திரிகர்களையும் கவரும் இடமாக விஸ்தரிக்கப்படவுள்ளது.

பல்வேறு மருத்துவக்குணம் நிறைந்த இந்த நன்னீரூற்றானது கடலுக்கு அருகாமையில் தோற்றம் பெற்றமையால், அற்புதமான ஒரு புண்ணிய தலமாக விளங்குகின்றது. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிபார்சினால் மரபுரிமை பேணப்படவேண்டிய தலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு இவ்வாறான ஒரு பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்யப்பட்டு வைத்தமை வடமாகாணத்திலேயே முதன் முதலான ஒரு நிகழ்வாகும் என சபையின் உதவிப்பணிப்பாளர் திருமதி விஜிதா சத்தியகுமார் தெரிவித்தார்.

மேலும் இது தொடர்பாக உரிய அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு இதனைத் திருத்திப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய சுற்றாடல் அதிகார சபை மேற்கொள்ளும். இந்த முயற்சிகளை முன்னெடுப்பதில் உறுதுணையாக இருந்த வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜாவின் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும் என்றார்.

அண்மையில் வல்வெட்டித்துறை ஊறணியில் உள்ள நன்னீருற்றுக் கேணி மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிபார்சின் அடிப்படையில் மரபுரிமை அமைச்சினால் மரபுரிமை பேணப்பட வேண்டிய தலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளரினால் இதற்கான பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர் நடராஜா அனந்தராஜாவின் தலைமையில் நடைபெற்ற பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்ட நிகழ்வில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின சுற்றுச்சூழல் அலுவலர் திருமதி.சண்முகப்பிரியா உட்பட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அலுவலர்களும், நகர சபை அலுவலர்களும், பொதுமக்களும், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# தொழிற்சங்க சம்மேளனம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் கீழ் கடமையாற்றும் பதவி நிலை தரத்திலான வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான தொழிற்சங்க சம்மேளனம் உருவாக்கப்பட உள்ளது.

சமூக சேவைகள் அலுவலர்கள், சிறுவர் நன்னடத்தை அலுவலர்கள், கலாசார அலுவலர்கள், சனசமூக அபிவிருத்தி அலுவலர்கள், கிராம அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோரை உள்ளடக்கி அமைக்கப்படவுள்ளதுடன் இதன் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்நகர் ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 2013 ஜனவரி முதல் அமுலுக்கு வரவுள்ள புதிய சம்பள அளவுத்திட்டம், புதிய ஆளணி உருவாக்கம் தொடர்பாக இதில் ஆராயப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளது. இதில் உரிய அலுவலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும்,

புதிய உயர் கல்லூரியில் அதே தினம் அதேநேரத்தில் மேற்குறித்த அலுவலர்களுக்கும், அவர்களது நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கும் நடைபெறுவதாக முன்னர் நிர்ணயிக்கப்பட்ட கலந்துரையாடல் வேறொரு திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (90)

# முரசின் இன்றைய பலன்

(25.12.2012 - செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 10 ஆம் திகதி. நட்சத்திரம் கார்த்திகை. திதி துவாதசி முற்பகல் 9.57 வரை. சித்தாமிர்தம் முன்னிரவு 10.44 வரை. வரை. இராகுகாலம் 3.27 - 5.57 வரை. சுபநேரம் 10.57 - 12.57 வரை. கார்த்திகை விரதம் - நத்தார் பண்டிகை. அரச வங்கி வர்த்தக விடுமுறை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நினைத்த காரியம் முடியும். தொழில் தடங்கல் விலகும். உபரி வருமானம். புத்திரரால் மகிழ்ச்சி. கடன் தொந்தரவு தீரும். எடுத்த காரியம் கைகூடும். |
| ரிஷபம் | புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து. தொழில் அனுகூலம். தாராள பணவரவு. குடும்பத் தேவைகள் பூர்த்தி. |
| மிதுனம் | சமூகத்தில் நன்மதிப்பு. உழைப்பினால் உயர்ச்சி. தொழில் சிறந்து, புதிய சாதனை. பணவரவு. சேமிப்பீர்கள். உடல்பிணி குறையும். |
| கடகம் | இலட்சியக் கனவு நிறைவேறும். சான்றோர் அரவணைப்பு. வேலையில் திருப்தி. சராசரி பணவரவு. பிள்ளைகள் விரும்பியது செய்வீர்கள். |
| சிம்மம் | மாறுபட்டு நடந்தவர்களும், அன்பு பாராட்டுவர். புதிய அனுகூலங்கள். தொழில் வளர்ச்சி. கௌரவமும் புகழும். பணவரவு முன்னேற்றம். |
| கன்னி | மன்திில் உற்சாகமும், செயல்களில் திறமையும் பரிமளிக்கும். வேலைகள் எளிதில் முடியும். கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம். |
| துலாம் | புதிய பணிகள் வரும். தொழில், நடைமுறை மாற்றம். பணவரவு தாராளம். நினைத்தது நடக்கும். தாய் வழியில் நம்பிக்கை. உறவும் நட்பும் போட்டியிட்டு உதவி. |
| விருச்சிகம் | பிள்ளைகளால் சமூக அந்தஸ்து. வெளியூரிலிருந்து நற்செய்தி. பழைய நண்பர் சந்திப்பு. வரவு உயரும். பொறுப்புகளும் கூடவே பாராட்டும். |
| தனுசு | எதிர்பார்த்த நன்மை வரும். உற்சாகமும், நம்பிக்கையும் பிறக்கும். பரிசு தேடி வரும். கூடுதல் பணி. சராசரி பணவரவு. வீட்டுப்பொருள் வாங்குவீர்கள். |
| மகரம் | குழப்பங்கள் வரும். சூழ்நிலை உணர்ந்து செயல்படுக. தொழில் சுமுக நிலை. அளவான பணவரவு. சேமிப்பு செலவுக்கு. தாயுடன் விவாதம். |
| கும்பம் | பழைய நினைவுகள். மனதில் பெருமிதமும், நிம்மதியும். பயணங்களால் ஆதாயம். அதிரடி இலாபமும் சலுகைகளும். |
| மீனம் | புதிய திட்டமிடல். இடையூறு செய்வோரை இனங் காண்பீர்கள். தொழில் நல்ல முன்னேற்றம். ஆதாய வரவு. வீட்டுப்பொருட்கள் வாங்கலாம். |

# குப்ரில் அதிரடிச் சதம் நியூசிலாந்து வெற்றி



(ஈஸ்ட் லண்டன்)

குப்ரிலின் அதிரடிச் சதத்தின் மூலம் தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது ருவென்ரி–20 போட்டியில் நியூசிலாந்து அணி அபார வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்க, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ருவென்ரி–20 கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவில் ஈஸ்ட் லண்டனில் நடைபெற்றது. இதில் மழை காரணமாக ஒரு ஓவர் குறைக்கப்பட்டு 19 ஓவர்கள் கொண்ட ஆட்டமாக நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி டுபிளிசர், டேவிற்ஸ் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 19 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டுபிளிசர் 43 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 63, டேவிற்ஸ் 38 பந்தில் 55, மில்லர் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பிரஸ்வெல் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 166 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு, குப்ரில் ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடி அணியின் வெற்றியை இலகுபடுத்தினார். இறுதியில் நியூசிலாந்து அணி 19 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் 69 பந்துகளை எதிர்கொண்ட குப்ரில் ஆறு சிக்ஸர்கள், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் நிக் கோல் 24 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்டநாயகனாக குப்ரில் தெரிவானார். இத்தொடரில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவாக்கியுள்ளனர். இந்நிலையில் தொடரைத் தீர்மானிக்கும் இறுதிப் போட்டி நாளை இடம்பெறவுள்ளது.




**இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி இன்றைய தினம் பெங்களூரில் இடம்பெறவுள்ளது. ருவென்ரி-20 கிண்ண அறிமுகம் நேற்று முன்தினம் பெங்களூரில் இடம்பெற்றது. இதில் கப்டன்களான டோனி, ஹபீஸ் கிண்ணத்தை அறிமுகம் செய்து வைப்பதைக் காணலாம்.**

# பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் நாணயச் சுழற்சி முக்கியம்



(மும்பை)

பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரில் நாணயச் சுழற்சியில் வெல்வது தான் முக்கியம் என இந்திய கப்டன் டோனி தெரிவித்தார்.

இந்திய மைதானங்களில் போட்டியின் முடிவு நாணயச் சுழற்சி வெல்வதைப் பொறுத்து அமையும். இது இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது ருவென்ரி-20 போட்டியில் நன்கு தெரிந்திருக்கும். பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியிலும் நாணயச் சுழற்சியில் வெல்வது முக்கிய பங்கு வகிக்கும். அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, பாகிஸ்தான் என எந்த அணிக்கு எதிரான போட்டியில் பங்கேற்றாலும் அதனை முக்கியமானதொடராகத் தான் கருதுகிறோம். எதிரணி யாராக இருந்தாலும் போட்டியின் தன்மையை உணர்ந்து எங்களின் திட்டத்தை செயற்படுத்தி வெற்றி பெற முயற்சிப்போம். தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்பதால் வீரர்களுக்கு காயம் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# ஒரு நாள் தொடரில் சாதிப்போம்



(மும்பை)

இந்தியாவுக்கு எதிரான 2ஆவது ருவென்ரி-20 போட்டியில் கிடைத்த வெற்றி, ஒருநாள் தொடரிலும் சாதிப்போம் என்ற நம்பிக்கையை அதிகரித்துள்ளது என, இங்கிலாந்து ருவென்ரி-20 அணி கப்டன் இயன் மோர்கன் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடந்த 2ஆவது ருவென்டி-20 போட்டியில் வெற்றி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த வெற்றி, அடுத்து நடக்கவுள்ள ஒருநாள் தொடரில் சாதிப்போம் என்ற நம்பிக்கையை அதிகரித்துள்ளது. கடைசிப் பந்தில் சிக்ஸர் அடித்து வெற்றியை உறுதி செய்தது திரில் அனுபவம். இரண்டு ஆண்டுகளுக்கு முன், ஒருமுறை பாகிஸ்தானுக்கு எதிராக இதுபோல நிகழ்ந்தது. நெருக்கடியான சூழ்நிலையில் கடைசிப் பந்தில் சிக்ஸர் அடிப்பது எளிதான காரியமல்ல.

இப்போட்டியில் எங்கள் அணி பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டனர். கடைசி ஒரு சில ஓவரில் ஓட்டங்களைக் கொடுத்தாலும், உடனடியாக சுதாகரித்து ஓட்டங்களை கட்டுப்படுத்தினர். களத்தடுப்பு அருமையாக இருந்ததால், 10 முதல் 15 வரை ஓட்டங்கள் தடுக்கப்பட்டது. அடுத்து நடக்கவுள்ள ஒருநாள் தொடருக்கு சிறந்த முறையில் பயிற்சி மேற்கொண்டு சாதிக்க முயற்சிப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

# பார்சிலோனா வெற்றி



(வல்லாதோலித்)

ரியல் வல்லாதோலித் அணிக்கு எதிரான ஸ்பானிஷ் லா லிகா கால்பந்து போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் லா லிகா கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் பார்சிலோனா, ரியல் வல்லாதோலித் அணிகள் மோதின. இதில் தொடக்கம் முதல் பார்சிலோனா அணி வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினாலும் முதல் பாதியில் ஷேவி (43ஆவது நிமிடம்) மட்டும் ஒரு கோல் அடித்தார். ரியல் வல்லாதோலித் அணி கோல் ஏதும் அடிக்கவில்லை.

பின் இரண்டாவது பாதியில் பார்சிலோனா மெஸ்ஸி (59)ஒரு கோல் அடித்தார். இதற்கு வல்லாதோலித் அணியின் ஜேவி (89)பதிலடி கொடுத்தார். போட்டியின் கடைசி நிமிடத்தில் பார்சிலோனா அணியின் கிறிஸ்டியன் டெல்லோ ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

முடிவில்,பார்சிலோனா அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# செல்சீ அணி வெற்றி

(லண்டன்)

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் அஸ்டன் வில்லா அணிக்கெதிரான போட்டியொன்றில் செல்சீ கழகம் வெற்றிபெற்றது. ஸ்வன்சீ கழகத்திற்கும், மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்திற்குமிடையிலான போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

செல்சீ அணிக்கும், அஸ்டன் வில்லா அணிக்குமிடையிலான போட்டியில் செல்சீ அணி 8–0 என்ற கணக்கில் வெற்றிபெற்றுக் கொண்டது. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய அவ்வணி, அஸ்டன் வில்லா அணிக்கு வாய்ப்புக்களை வழங்கியிருக்கவில்லை.

செல்சீ சார்பாக 3ஆவது, 29ஆவது, 34ஆவது, 58ஆவது, 75ஆவது, 79ஆவது, 83ஆவது, 90ஆவது நிமிடங்களில் கோல்கள் பெற்றுக்கொள்ளப் பட்டிருந்தன. இறுதிக் கோல் அடிக்கப்படுவதற்கு முன்னதாக பெனால்ட்டி வாய்ப்பொன்றை செல்சீ தவறவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஸ்வன்சீ அணிக்கும், மன்செஸ்டர் யுனைட்டட் அணிக்குமிடையிலான போட்டி 1–1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்திருந்தது. இதில் போட்டியின் 15ஆவது நிமிடத்திலேயே மன்செஸ்டர் யுனைட்டட் அணி சார்பாக கோலொன்று பெறப்பட்ட போதிலும், ஸ்வன்சீ அணி சார்பாக 29 ஆவது நிமிடத்தில் கோல் பெறப்பட்டது. அதன் பின்னர் இரு அணிகளும் முயற்சித்த போதிலும் கோலெதனையும் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை. இப்போட்டியில் மன்செஸ்டர்யுனைட்டட் அணிக்கு 4 மஞ்சள் அட்டைகளும், ஸ்வன்சீ அணிக்கு 2 மஞ்சள் அட்டைகளும் காண்பிக்கப்பட்டிருந்தன.

# மெல்போர்னில் நாளை இரண்டாவது டெஸ்ட்

(மெல்போர்ன்)

இலங்கை அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை மெல்போர்னில் ஆரம்பமாகவுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஏற்கனவே, அவுஸ்ரேலிய அணி முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்று முன்னிலை வகிக்கின்றது. தொடரை வெல்லும் முனைப்புடன் அவுஸ்ரேலிய அணி களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை அணி தொடரை வெல்லவோ சமப்படுத்தவோ ஒரு வெற்றியையேனும் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.




வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மற்றும் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வர்ண விருது வழங்கும் விழாவில் விருது வென்றோர், விருந்தினர்களுடன் நின்பதைக் காணலாம். இந்நிகழ்வு கடந்த 20ஆம் திகதி கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (படம் நந்தன்)

# சச்சின் - முக்கிய கணங்கள்



உலக கிரிக்கெட்டிற்கு பல்வேறு மட்டத்தில் பெரிய பங்களிப்பு செய்த நட்சத்திர துடுப்பாட்ட வீரரும் உலகின் தலை சிறந்த துடுப்பாட்ட வீரராக கருதப்படுபவருமான சச்சின் டெண்டுல்கரின், ஒருநாள் கிரிக்கெட்டின் 10 முக்கிய கணங்களைத் தொகுக்கலாம். இது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாக மாறுபடினும், இந்த 10 கணங்களை சச்சினே மறக்கமாட்டார்.

1. ஏப்ரல் 2, 2011 உலகக் கோப்பை 2011:

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் சச்சின் எப்போதுமே சிறப்பான ஆட்டங்களை வெளிப்படுத்துபவர். 2011 உலகக் கோப்பையின் 9 போட்டிகளில் 482 ஓட்டங்களை எடுத்தார். 120 ஓட்டங்களை இங்கிலாந்துக்கு எதிராக அவர் எடுத்ததுதான் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும். ஆனால் அந்தப்போட்டி சமநிலையானது. உலகக் கோப்பை 2011இல் சச்சின் 2 அரைச் சதம், 2 சதம் எடுத்தார். 52பவுண்டரிகள் 8 சிக்சர்கள் மற்றும் 91.98 ஓட்டங்கள் ஸ்ட்ரைக் ரேட். இறுதிப் போட்டியில் இலங்கைக்கு எதிராக சச்சினே வெற்றி ஓட்டங்களை அடிக்க நினைத்திருப்பார் ஆனால் 18 ஓட்டங்களில் அவர் வீழ்ந்தார். பின்னர் கம்பீர், டோனி இந்திய அணியை வெற்றிபெறச் செய்தனர். இதனை தன் கிரிக்கெட் வாழ்வின் சிகரமான கணம் என்று சச்சினே பின்பு அறிவித்தார்.

2. சச்சினின் 100ஆவது சதம்! இது சச்சினுக்கு ஒரு பெரிய தலைவலியாக விடிந்தது. ஆனால் அவர் அத்தனை நெருக்கடிகளையும் விமர்சனங்களையும் தாங்கிக் கொண்டு ஆசிய கோப்பையில் வங்கதேசத்திற்கு எதிராக இந்த 100ஆவது சதத்தை எடுத்து முடித்தார். தோல்வி சச்சினுக்கு பிடிக்காத ஒன்று ஆனால் இந்தப் போட்டியில் சச்சின் உலக சாதனை புரிந்தும் இந்தியா தோல்வியைத் தழுவியது. சச்சினுக்கு தோல்வி பிடிக்காது என்பது அவர் கப்டனாக இருந்த காலத்தில் அடைந்த அவரது எரிச்சல் நிறைந்த வாசகங்களே தெரிவிக்கும். ஆனால் சாதனை சதம் என்பது சாதனை சதம்தானே!

3. பிரட்மனின் கனவு அணியில் சச்சின் இடம்பெற்றது!

அவுஸ்ரேலிய லெஜென்ட் டொன் பிரட்மன் அனைத்து கால சிறந்த அணியை அறிவித்தார். பிரையன் லாரா, விவியன் ரிச்சர்ட்ஸ் போன்ற வீரர்களுக்கே இந்த அணியில் இடமில்லை. ஆனால் பிரட்மன் சச்சினை தேர்வு செய்திருந்தார். 69 வீரர்களை டொன் பிராட்மன் அலசி 11 பேரைத் தேர்வு செய்தார். இந்த 69 பேரில் சுனில் கவாஸ்கர், கபில்தேவ் ஆகியோரும் இருந்தனர்.

4. 2003 உலகக் கோப்பை போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக அடித்த 98 ஓட்டங்களை மறக்க முடியுமா? 2003 உலகக் கோப்பை கிரிக்கெட்டின் கடினமான காலகட்டத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா வெற்றிபெற்றேயாகவேண்டிய நெருக்கடியில் இருந்தது. பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடி 270 ஓட்டங்களுக்கு மேல் குவித்தது. வசிம் அக்ரம், வக்கார் யூனிஸ், சொகைப் அக்தர் ஆகியோர் இருக்கும்போது இந்தியா வெல்லுமா என்று பலரும் பேசினர். ஆனால் நடந்தது என்ன? சச்சின், சேவாக் இருவரும் அடித்த அடியில் முதல் 11 ஓவர்களில் ஸ்கோர் 100 ஓட்டங்களை கடந்தது. சச்சின் சொகைப் அக்தர் பந்திற்கு அடித்த அந்த ஒப் கட் சிக்சரை இன்னும் மறக்க முடியாது. 98 ஓட்டங்கள் எடுத்தார் சச்சின் இந்திய வெற்றி பெற்றது. சச்சினின் மிகச்சிறந்த ஒருநாள் இன்னிங்ஸ்களில் இதுவும் ஒன்று.

5. உலக சாதனை இரட்டைச் சதம்! தென்னாபிரிக்காவுக்கு எதிராக சச்சின் இந்த அபார இன்னிங்ஸை ஆடினார். ஒருவரும் தென்னாபிரிக்காவுக்கு எதிராக நினைத்துக் கூட பார்க்கமுடியாது ஸ்ரெய்ன், மோர்கல் இருக்கும்போது எங்கிருந்து 50 ஓட்டங்கள் வரும் என்றே கூறமுடியாது. ஆனால் 147 பந்துகளில் 200 ஓட்டங்களை விளாசினார். சச்சின் 25 பவுண்டரிகள் 3 சிக்சர்கள் அடித்தார். இந்தியா உலக சாதனை 401 ஓட்டங்களை எடுத்தது. தென்னாபிரிக்கா 153 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. இதற்கு முன்னர் நியூசிலாந்தில் 167 ஓட்டங்களையும் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக இந்தியாவில் 175 ஓட்டங்களையும் எடுத்தபோதே சச்சின் இரட்டைச் சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

6. 1999 உலகக் கோப்பையில் உணர்ச்சிகரமான சதம்! டெண்டுல்கரின் தந்தை இறந்து போன சமயம், சிம்பாப்வே அணிக்கு எதிராக சச்சின் விளையாடவில்லை. பின்னர் கென்யாவுடன் விளையாட நேரிட்டது. இதற்கு முன்னர் 21 ஒருநாள் சதம் எடுத்திருந்தார் சச்சின், இந்த சதம் தந்தை இறந்த பின்னர் உடனடியாக எடுத்த சதம் என்பதால் அவரது வாழ்வின் உணர்ச்சிகரமான சதமாக இது அமைந்தது. இதில் 140 ஓட்டங்களை அவர் எடுத்தார்.

7. 1998ஆம் ஆண்டு சார்ஜாவில் அடித்த மணல் புயலும் சச்சின் புயலும்

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக எடுத்த 143: இறுதிக்கு செல்ல இந்திய அணி இத்தனை ஓட்டங்களை எடுக்கவேண்டும் என்பது நிர்பந்தம். பெவன் சதம் எடுக்க ஆஸி. 284 ஓட்டங்களை எடுத்தது. இந்தியா 285 ஓட்டங்களை எடுத்தால் பிரச்சினையில்லை. அல்லது தோற்றால் குறைந்தது 254 ஓட்டங்களை எடுத்திருக்கவேண்டும். ஆனால் திடீரென மைதானத்தில் மணற் சூறைக்காற்று வீச இந்தியா வெற்றி பெற 276 ஓட்டங்களும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற 237 ஓட்டங்களும் தேவை. மீண்டும் களமிறங்கிய சச்சின் தகுதி பெறுவதைக் குறிக்கோளாக வைக்காமல் உண்மையான வெற்றிக்காக ஆடினார். காஸ்பரோவிச் பந்தில் அடித்த சிக்சர்களை மறக்க முடியுமா கடைசியில் ஆடிய பேயாட்டத்தை மறக்க முடியுமா? 131 பந்துகளில் 143 ஓட்டங்களை விளாசினார் சச்சின். கடைசியில் நடுவரின் மோசமான தீர்ப்புக்கு ஆட்டமிழந்தார். இல்லையெனில் உண்மையில் இந்தப்போட்டியில் இந்தியா வெற்றியே கூட பெற்றிருக்கும்.

8. அதே சார்ஜா, இறுதிப் போட்டி சதம்! 24 ஏப்ரல் 1998 சச்சினின் பிறந்த தினம். அன்றைய தினம் அடித்த சதம் மறக்க முடியாதது. அவுஸ்ரேலியா முதலில் ஆடி 121/5 என்று திணறி யது. பின்னர் ஸ்ரீவோ, டரன் லீமன் இன்னிங்ஸ்களினால் 272 ஓட்டங்கள் எடுத்தது. இந்தியா துரத்தக் களமிறங்கியவுடன் சச்சின் போட்டுத் தாக்க ஆரம்பித்தார். காஸ்பரோவிச்சை இரண்டு சிக்சர்கள் விளாசி அடிதடியைத் தொடங்கிய சச்சின் ஷேன் வோர்ன் இதன் பின்னர்தான் சச்சின் தனக்கு பயங்கர சொப்பனங்களை கொடுக்கிறார் என்றார். சச்சின் 134 ஓட்டங்கள் எடுத்தார். அந்தப்போட்டியில் ஒரு அபாரமான ஒருநாள் இன்னிங்ஸ் இதுவாகும்.

9. 2008ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய மண்ணில் முதல் ஒருநாள் சதம் சச்சின் அவ்வளவு ஆட்டங்களை ஆடியிருந்தாலும் அவுஸ்ரேலிய மண்ணில் அவரது அதிகபட்ச ஒருநாள் ஓட்ட எண்ணிக்கையாக பாகிஸ்தானுக்கு எதிராக எடுத்த 93 ஓட்டங்களாகவே இருந்தது. டோனி தலைமையிலான இந்திய அணி இறுதிப்போட்டியில் நுழைந்தது. இந்தப் போட்டியில் சச்சின் 126 ஓட்டங்களை எடுத்து இறுதிவரை ஆடி தனி மனிதனாக அவுஸ்ரேலிய பந்து வீச்சை அடித்து நொருக்கி வெற்றிபெறச்செய்தார். அவுஸ்ரேலியா 239 ஓட்டங்களை எடுத்தது. ரோகித் ஷர்மாவுடன் இணைந்து சச்சின் 123 ஓட்டங்களை சேர்க்க ரோகித் 66 ஓட்டங்களை எடுத்தார். சச்சின் தனது 42ஆவது ஒருநாள் சதத்தை எடுத்தார். இந்தியா வெற்றி பெற்றது.

அதே சிபி தொடர் இரண்டாவது இறுதிப் போட்டி சச்சின் அபாரம்! முதல் போட்டியில் தோல்வியடைந்த கடுப்பில் அவுஸ்ரேலியா இரண்டாவது இறுதிப்போட்டிக்கு வந்தது. ஆட்டம் அவர்களுக்குச் சாதகமான பிரிஸ்பன் மைதானத்தில் நடைபெற்றது. இந்தப்போட்டியில் இந்தியா முதலில் ஆடியது. சச்சின் மற்றொரு சதத்திற்கான அபார இன்னிங்சை ஆடினார். சிறந்த கவர் டிரைவ்கள், ஓப் கட்கள், புல் ஷொட்கள் என்று தூள் கிளப்பினார். ஆனால் 91 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இது சச்சினின் இன்னிங்ஸ்களில் சிறப்பான இனிங்ஸ் என்பதில் ஐயமில்லை. இந்தியா 258 ஓட்டங்கள் எடுக்க அவுஸ்ரேலியா 249 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. முதன் முறையாக சிபி தொடர் முத்தரப்பு ஒருநாள் தொடரில் இந்தியா சம்பியனானது.

10. சச்சின் முதன் முதலாக ஒருநாள் போட்டியில் தொடக்கத்தில் களமிறங்கிய போட்டி!

27 மார்ச் 1994 - சச்சின் ஒக்லாந்தில் நியூசிலாந்துக்கு எதிராக அவராகவே கேட்டு வாங்கி தொடக்கத்தில் களமிறங்கினார். சச்சின் என்றால் யார் என்றும் அவர் மீது ஒரு பயமும் ஏற்படுத்திய இன்னிங்ஸ் ஆகும். இது பந்து வீச்சுக்குச் சாதகமான கரடு முரடு ஆடுகளத்தில் நியூசிலாந்து அணி 142 ஓட்டங்களுக்கு சுருண்டது. இந்தியா களமிறங்கும்போது இந்த ஆடுகளத்தில் இந்தியா ஓட்டங்களைக் குவிப்பது கஷ்டம். திக்குமுக்காட வேண்டும் என்றெல்லாம் வர்ணனையாளர்கள் தெரிவித்துக் கொண்டிருந்தனர். ஆனால் சச்சின் தொடக்கத்தில் களமிறங்குவார் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் அதுதான் நடந்தது. டேனி மாரிசன், பிரிங்கிள், அடாது மழை பெய்தாலும் விடாது டைட்டாக வீசும் கெவின் லோர்சன் என்று நியூசிலாந்தின் தன்னம்பிக்கையுடைந்தான் இருந்தது. ஆனால் என்னவாயிற்று? சச்சின் புயல் போல் ஒரு இன்னிங்சை ஆடினார். 49 பந்துகளில் 82 ஓட்டங்களை விளாசினார் அதில் 15 பவுண்டரி 2 சிக்சர்கள். 13 ஓவர்களில் ஓட்ட எண்ணிக்கை 100-ஐ கடந்தது. இந்தியா 23 ஓவர்களில் 143 ஓட்டங்களை எடுத்து அபார வெற்றி பெற்றது. அப்போது தொடங்கிய தொடக்க வீரர் பயணம் பல அதிரடி இன்னிங்ஸ்களை கண்ட பின்னரே ஓய்ந்தது.

# சச்சின் ஓய்வு வெளிவந்த கருத்துக்கள்

ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற சச்சின் டெண்டுல்கர் குறித்து முன்னாள் வீரர்கள் பலர் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

அதன் விபரம் வருமாறு:

**கங்குலி:** பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரில் சச்சின் பங்கேற்பார் என எதிர்பார்த்தேன். தற்போதைய முடிவும்சரியானது தான். இனி தேர்வாளர்களுக்கு எந்த நெருக்கடியும் இருக்காது. இது அவரது சொந்த முடிவு. அவரை யாரும் வெளியில் அனுப்பமுடியாது என்றார்.

**ஸ்ரீகாந்த்:** ஒருநாள் போட்டியில் இருந்து சச்சின் ஓய்வு பெற்றது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. இதேபோல டெஸ்ட் போட்டிகளிலும் உச்சத்தில் இருக்கும் போது தான் ஓய்வு பெறுவார் என நினைக்கிறேன். பாகிஸ்தான் அணிக்கு எதிராக அவரின் செயற்பாடு சிறப்பாக உள்ளது. கடந்த 2011இல் அவர் ஓய்வு பெறுவார் என எண்ணினேன். சதத்தில் சதம் கண்ட சாதனையை யாராலும் மிஞ்சமுடியாது என்றார்.

**ஹர்பஜன்:** சச்சின் ஒரு சிறந்தவீரர்,மனிதர், இந்தியன். அவரால் நாட்டுக்கு பெருமை.

**கீர்த்தி ஆசாத் :** சச்சின் ஓய்வு பெற வேண்டும் எனப் பலரும் வலியுறுத்தினர். ஆனால் சரியான நேரத்தில் ஓய்வை அறிவித்து தனது கடமையை சிறப்பாகச் செய்துள்ளார் என்றார்.

**பாபு நட்கர்னி:** சச்சின் ஓய்வு பெற வேண்டும் என்று கடந்த சில மாதங்களாக பலரும் வலியுறுத்தினர். ஆனால் தற்போது ஓய்வு அறிவித்தபின் ஏன் ஓய்வு பெற்றார் என கேள்வி எழுப்புகின்றனர். இந்திய மக்களின் மனதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை. அவருடைய உடல் நிலையைப் பற்றி அவருக்குத் தான் தெரியும். ஓய்வு பெற இது தான் சிறந்த தருணம் என நினைத்திருப்பார் என்றார்.

**சரத் பவார்:** சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் எனது சிறந்த நண்பர். சச்சின் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வை அறிவித்தது வருத்தமான விடயம். இருப்பினும் நாட்டிற்குப் பெருமை தேடித்தந்த அவருக்கு நன்றி என்றார்.

பாகிஸ்தானின் இளம் வீரர் **உமர் அமின்** : என்னைப் பொறுத்தவரை கிரிக்கெட் ஒரு மதமாக இருந்தால், அதற்கு சச்சின் தான் கடவுள். இவரது ஓய்வு பெரும் ஏமாற்றம் அளிக்கிறது என்றார்.

**டபள்யூ.வி.ராமன்:** சச்சினுக்கு மனமார்ந்த பாராட்டுகள். கிரிக்கெட்டின் சகாப்தம் இப்போது முடிவுக்கு வந்துள்ளது. அவரது முடிவில் வியப்பொன்றும் இல்லை. கடந்த ஓர் ஆண்டாகவே ஒருநாள் போட்டியிலிருந்து விலகி வந்தார் என்றார்.

**கப்டன் ரமீஸ் ராஜா :** சச்சின் முடிவு புரிந்து கொள்ளக் கூடிய ஒன்றே. கடந்த 23 ஆண்டுகளாக ஒருநாள் போட்டிகளில் விளையாடிய அவர், தன்னால் முடிந்த சாதனைகள் அனைத்தையும் நிகழ்த்தியுள்ளார். உலகக் கோப்பையையும் வென்றுள்ளார். ஒருநாள் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள தன் மூலம் ஆண்டுக்கு சுமார் 30 நாள்கள் மட்டுமே சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் விளையாடுவார். அதனால், டெஸ்ட் போட்டிகளில் சிறந்த பங்களிப்பைத் தருவார் என்றார்.

**அர்ஜுனா ரணதுங்கா :** கிரிக்கெட் போட்டிகளில் சச்சின் நிறைய ஓட்டங்களைக் குவித்துள்ளார். டெஸ்ட் போட்டிகளில்தொடர அவர் முடிவு செய்துள்ளது சரியானதே. 200 டெஸ்ட் போட்டிகள் என்றில்லாமல் தொடர்ந்து சிறப்பாக விளையாட வேண்டும். சர்வதேச கிரிக்கெட்டுக்கு பல்வேறு சாதனைகளை சச்சின் ஆற்றியுள்ளார் என்று தெரிவித்தார்.

**கெவின் பீற்றர்சன் :** சச்சினுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். சாதனைகள் பொய் சொல்லாது. அது உண்மையை மட்டும் உரைக்கும். வெல்டன் சச்சின் என்று டுவிட்டரில் தெரிவித்துள்ளார்

**திலிப் வெங்சர்க்கார்:** உண்மையில் நான் ஆச்சரியமடைந்தேன், டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடர முடியும் என்றால் ஒருநாள் கிரிக்கெட்டிலும் அவர் தொடர்ந்திருக்கலாம். எமது அணி ஒரு சீசனில் 25 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடுகிறோம். சர்வதேச கிரிக்கெட்டில் தொடர்ந்து விளையாடுவது முக்கியம். ஒருநாள் கிரிக்கெட்டில் தொடக்கத்தில் களமிறங்கி முழு இன்னிங்சிலும் விளையாடுவார். ஒருநாள் கிரிக்கெட்டை அவர் விட்டிருக்கக்கூடாது. டெஸ்ட் போட்டி விளையாடும் வரை ஒரு நாள் போட்டிகளிலும் அவர் விளையாடியிருக்கவேண்டும்.

**கவாஸ்கர் :** டெண்டுல்கரின் ஓய்வு முடிவுக்கு அவர் மீதான விமர்சனமும் ஒரு காரணமாக இருக்கலாம். அவர் ஒருநாள் போட்டியில் 49 சதம் அடித்துள்ளார். 50 சதம் அடித்த பின்னர் ஓய்வு பெற்று இருந்தால் மிகவும் சிறப்பாக இருந்து இருக்கும். என்னைப் பொறுத்தவரை அவர் இன்னும் நல்ல உடல் தகுதியுடன் தான் இருக்கிறார்.

**கும்ளே:** இந்திய கிரிக்கெட்டில் சச்சின் இல்லை என்பதை நினைத்து பார்ப்பது என்பது கடினமானதே. இந்த ஓய்வு மூலம் அவர் நிம்மதி அடைந்து இருப்பார். துடுப்பாட்டத்தில் சாதனைகள் புரிந்த அவர் ஒரு சிறந்த சுழற்பந்து வீரர் ஆவார்.

**ஷேன் வோர்ன் :** டெண்டுல்கரால் எனது இரவுத் தூக்கம் பலமுறை பாதித்துள்ளது. அவரது ஆட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியாது. டொன் பிரட்மனை தவிர யாருடனும் அவரை ஒப்பிட இயலாது. பிரட்மனை போல அனைத்து நுணுக்கத்துடன் விளையாடிய ஒரே வீரர் டெண்டுல்கர் ஆவார்.

**ராகுல்ராவிட்:** டெண்டுல்கர் தனி சிறப்புடைய கிரிக்கெட் வீரர். அவரது சாத னைகளைப் பார்த்தால் தெரியும். ஓட்டக்குவிப்பில் அவருக்கும், மற்ற வீரர்க ளும் இடையே மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது.

**ஜவகல் ஸ்ரீநாத் :** ஒருநாள் போட்டியில் அவரது துடுப்பாட்டத்தைப் பார்ப்பது என்பது மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தும். ஆட்டத்தின் தன்மையை மாற்றக்கூடிய மிகச் சிறந்த வீரர். அவர் அதிரடியாக விளையாடினால் எதிரணி பந்து வீச்சாளர்களின் நிலை திண்டாட்டம் தான். அவருடன் ஒன்றாக இணைந்து ஆடியது மகிழ்ச்சி அளிக்கிறது.







# நத்தார் சி...



## நித்திய மகிழ்ச்சியும், நிரந்தர சமாதானமும் நீடித்து நிலைக்கட்டும்!

நாம் வாழும் பூமி எமக்கென்றே வாக்களிக்கப்பட்டது என்றும், எமது மக்களின் மனங்களில் நித்திய மகிழ்ச்சியும், எமது வாழ்விடங்கள் தோறும் நிரந்தர சமாதானமும் நீடித்து நிலவ வேண்டும் என்றும் ஈ.பி.டி.பி (ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி) யின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயறசி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நத்தார் தினத்தையொட்டிய தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கருணை மைந்தன் இயேசு பாலன் பிறப்பெடுத்த நத்தார் தினத்தை கொண்டாடி மகிழும் மக்களின் மனங்களில் நாம் நம்பிக்கை ஒளியினை மேலும் வலுப்படுத்த விரும்புகின்றோம்.

நாம் சொல்லும் கருத்துக்கள் சத்திய வாககுகள் போன்றவை. அவை என்றும் தோற்பதில்லை. எமது தீர்க்கதரிசனங்களும், அதை அடைவதற்காக உண்மை வழி ஊடாக நாம் செல்லும் பயணமும் நம்பிக்கை தரும் வல்லமை படைத்தவை.

கடந்து போன காலங்களில் கற்பாறைகளில் விதைக்கப்பட்ட விதைகளாகவே எமது மக்களின் சமாதான விருப்பங்கள் நிறைவேறாத ஆசைகளாக முடங்கிப் போயிருந்தன.

ஆனாலும், துயரங்களை மட்டும் சந்தித்திருந்த எமது மக்களுக்கு இனியதொரு சமாதான சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது.

வலிபட்டு, வதைபட்டு, வருத்தப்பட்டு உருவாக்கப்பட்டதே இந்த சமாதான சூழல். இதை நாம் அனைவரும் பாதுகாக்க வேண்டும். இனி வரும் காலம் நல்ல கனிதரும் மரங்களை உருவாக்கும் காலம் என்ற எதிர்கால நம்பிக்கையோடு, மலர்ந்திருக்கும் சமாதான சூழலை எமது மக்கள் இன்னமும் அதிகமாக விசுவாசிக்க முன்வர வேண்டும்.

சமாதானத்தை விரோதிப்பவர்கள் சாத்தான்கள் போல் வேதம் ஓதுவார்கள். வன்முறைகளுக்கு தூபமிடுவார்கள். இரக்கமும் கருணையும் இல்லாத துயர வாழ்வொன்றை மறுபடியும் எமது மக்கள் மீது திணிக்க விரும்புவார்கள்.

இந்த முயற்சிகளே இன்று மீண்டும் பல் வேறு வடிவங்களில் ஆரம்பிக்கப்பட்டி ருப்பதையும் நாம் காண்கின்றோம். இது குறித்து எமது மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்.

எமது மக்களாகிய உங்களோடு நாமும் சேர்ந்து பாரச் சுமைகளை சுமக்கின்றோம். எங்கள் முதுகு வலித்தாலும் நிரந்தர சமாதானத்தை நோக்கிய எமது இலட்சியப் பயணம் நின்று விடாது.



நாம் விரும்பும் சமாதானம் என்பது சமவுரிமை சுதந்திரத் துடன் சேர்ந்ததே. அதற்கு நாம் விசுவாசம் உள்ளவர்களாக என்றும் இருக்க வேண்டும்.

நாம் அனைவரும் நியாயம் உள்ளவர்களாகவும், நீதிச்சட்டங்களுக்கு கட்டுப்பட்டவர்களாகவும இருக்க வேணடும்.

அவலங்கள் நடககாத, அழுகுரல்கள் கேட்காத, பஞ்சம், பசி, பட்டினி இல்லாத, எவரையும் எவரும் அடிமை கொள்ளாத புதியதொரு சமாதான இராச்சியத்தை நாம் தொடர்ந்தும் விரும்புவோம்.

இல்லங்கள் தோறும் இருள் விலகட்டும்.

இவற்றுக்காக தொடர்ந்தும் நாம் ஒன்றிணைந்து உழைப்போம்.

இவ்வாறு தனது நத்தார் தின வாழ்த்துச் செயதியில் தெரிவித்திருககும் ஈ.பி.டி.பி (ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி) யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள், இன்னமும் துயரங்களை சுமப்பவர்களாக இருப்பினும், எஞ்சிய துயர்களும் விரைவில் விலகும் என்ற நம்பிக்கையோடு நத்தார் தினத்தை கொண்டாடி மகிழுங்கள் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கிறிஸ்ம...

- கிறிஸ்மஸ் ...
  "காப்பாற்ற...
- கிறிஸ்மஸ் ...
  வழக்கத்தி...
- இயேசு பிற...
  என்ற பெய...
  முடே என...
  பிறந்த பு...
  சூட்டியவர்.
- கிறிஸ்மஸ் ...
  டிசம்பர் 25...
- கிறிஸ்மஸ் ...
  பெயரும் உ...
  கிறிஸ்துவை...
  குறிக்கும் ...
  அவரை வ...
  என்று அ...
- கிறிஸ்மஸ் ...
  வித்தவர் ...
  என்ற துற...
- யேசு மாட்...
  நினைவுபடு...
  போன்ற கு...
  கிறிஸ்மஸ் ...
  செய்து ம...
  டுள்ளனர்.
- ...மெழுகுவர்...
  வழக்கம் ...
- உலகத்தின்...
  அளிக்கப்ப...
  அன்றுதான்...

## கிறிஸ்மஸ் மரம்

கிறிஸ்மஸ் மரம் என்று தனியாக ஒரு மரம் இல்லை. ஆனால், கிறிஸ்மஸின் போது இம்மரத்தைப் பயன்படுத்தியதால் இம்மரம் தற்போது கிறிஸ்மஸ் மரம் என அழைக்கப்படுகிறது. பர் மரங்களை கிறிஸ்மஸ்"டன் இணைத்துக் கொண்டாடிய புகழ் ஜெர்மானியரையே சாரும்.



கி.பி.எட்டாம் நூற்றாண்டு அளவில் போனியாஸ் என்ற கிறிஸ்தவ பாதிரியார், ஜெர்மனிக்கு இறை சேவைக்காக வந்தார். ஒரு கிறிஸ்மஸ் நாளில் இவர் ஒரு பர் மரத்தை ஆசீர்வதித்து குழந்தை இயேசுவுக்கு அதை ஒப்புக் கொடுத்தார்.

அது முதல் பர்மரம் கிறிஸ்மஸ்மரம் ஆனது. அதிலிருந்து ஒவ்வொரு கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் போதும் இம்மரம் வீடுகளில் நடப்பட்டது.

இதன் பிறகு ஜெர்மானிய இளவரசர் அல்பேர்ட்டுக்கும், இங்கிலாந்து இளவரசி விக்டோரியாவுக்கும் திருமணம் நடைபெற்றது.

1841 ஆம் ஆண்டில் அல்பேரட், இங்கிலாந்து அரண்மனையில் ஒரு கிறிஸ்மஸ் மரத்தை நட்டு, அதில் பல பரிசுப் பொருள்களைக் கட்டித் தொங்க விட்டார். மரத்தைச் சுற்றிலும் மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்தார்.

பின்பு இப்பரிசுப் பொருள்களைப் பலருக்கும் வழங்கினார். இதன் பின்னரே கிறிஸ்மஸ் மரம் இங்கிலாந்து முழுவதும் அமைக்கப்பட்டது. இத்தாலியில் கிறிஸ்மஸ் மரத்தை ப்ரெஸ்பியோ என அழைக்கின்றனர். இம்மரத்தைச் சுற்றிலும் வண்ண வண்ண மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்து பாடல்களைப் பாடி மகிழ்கின்றனர்.

## கடவுள் வருகையை அறிவிக்கும் ஸ்டார்



கிறிஸ்மஸ் பண்டிகையின் போது கிறிஸ்மஸ் தினத்திற்கு முன்பாகவே எல்லோர் வீடுகளிலும் பெரிய ஸ்டார்களை தொங்க விடுவர். இந்த பழக்கம் எப்படி வந்தது தெரியுமா?

இயேசு கிறிஸ்து பிறந்தபோது அதனை அறிவிக்கும் படியாக, விண்ணில் வால் நட்சத்திரம் ஒன்று தோன்றியது. எனவேதான் இந்த ஸ்டார் அமைக்கும் பழக்கம் வந்தது.

அப்போது ஆயர்கள் ஆடுமேய்த்து விட்டு இரவில் தூங்கிய போது வானில் இருநது தேவதை ஒன்று தோன்றி, "பயப்படாதீர்கள் உங்களுக்கெல்லாம் மிகுந்த சந்தோஷத்தை கொடுக்கும் செய்தி ஒன்றை சொல்கிறேன். மக்களின் பாவத்தை போக்க கிறிஸ்து என்னும் ரட்சகர் பிறந்துள்ளார்" என்று அறிவித்தார்.

அதன் பிறகு அவர்கள் இயேசு குழந்தையை கண்டு வணங்கி மகிழ்வுற்றனர். இவற்றை நினைவுகூரும் வகையில்தான் குடில்கள் அமைத்து, நட்சத்திரங்களை தொங்கவிட்டு, பரிசுப்பொருள்கள் கொடுத்து தங்கள் சந்தோஷத்தை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்கின்றனர்.

# சிறப்பு மலர்



## கிறிஸ்மஸ் அருமைத் தகவல்கள்!

- கிறிஸ்மஸ் என்பது கிரேக்கச்சொல். இதற்கு "காப்பாற்ற அவதரித்தவர்" என்று பொருள்.
- கிறிஸ்மஸ் என்ற சொல் கி.பி. 1131 இல் இருந்துதான் வழக்கத்திற்கு வந்தது.
- இயேசு பிறந்த விழாவானது ஆரம்பத்தில் ஒளி விருந்து என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தது. கிளமண்ட் முடே என்ற அமெரிக்கப் பெண்மணிதான் இயேசு பிறந்த புனித நாளுக்கு "கிறிஸ்மஸ்" என்று பெயர் சூட்டியவர்.
- கிறிஸ்மஸ் பிறப்பை நிர்ணயித்த ஆண்டு, கி.பி. 386, டிசம்பர் 25, புதன்கிழமை ஆகும்.
- கிறிஸ்மஸ் திருநாளுக்கு X-MASS என்ற இன்னொரு பெயரும் உண்டு. ஆங்கிலத்தில் உள்ள X என்ற எழுதது கிறிஸ்துவையும் MASS என்பது கூட்டத்தையும் குறிக்கும் வார்த்தைகள். கிறிஸ்து பிறந்த நாளில் அவரை வணங்கக்கூடிய கூட்டத்தையே கிறிஸ்மஸ் என்று அழைக்கின்றனர்.
- கிறிஸ்மஸ் குடில் அமைக்கும் முறையைத் தோற்றுவித்தவர் அசீசீ நகரில் வாழ்ந்த "புனித பிரான்சிஸ்" என்ற துறவியாவார்.
- யேசு மாட்டுத் தொழுவத்தில் பிறந்ததால், அதை நினைவுபடுத்தும் பொருட்டுதான் மாட்டுக்கொட்டகை போன்ற குடில் அமைக்கப்படுகின்றது. இத்தாலியர்கள் கிறிஸ்மஸ் தினத்தன்று மாடுகளை குளிப்பாட்டி அழகு செய்து மரியாதை செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.
- [illegible]ழுகுவர்[illegible]யை ஏற்றிவைத்து யேசுவை வணங்கும் வழக்கம் ஜெர்மானியர்களிடமிருந்து வந்தது.
- உலகத்தின் எல்லா நாடுகளிலும் பொது விடுமுறை அளிக்கப்படுவது யேசுபிரான் அவதரித்த கிறிஸ்மஸ் அன்றுதான்.

## ஆளுநரின் வாழ்த்துச் செய்தி



பொதுவாக நத்தார் திருநாளில் அனைவரும் பழையனவற்றை மறந்து நிகழ்காலத்தைப் பற்றி சிந்திப்பார்கள். இந்த நத்தார் பெருநாளில் செல்வச் சிறார்கள் நத்தார் தாத்தாவிடம் தமக்குத் தேவையானவற்றை கேட்டுப் பெற்றுக்கொள்ளுவார்கள். அதற்குரிய கிரயத்தை பெரியோர் செலுத்துவார்கள். நத்தார் திருநாளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந் நன்நாளைக் கொண்டாடுவது வழக்கமாகும்.

கிறிஸ்து திருமகனின் பிறப்பை நினைவூட்டுவது நத்தார் திருநாளாகும். உலகின்கண் சமாதானம் விடிகின்றது என்பதை நத்தார் திருநாள் சுட்டி நிற்கின்றது. இந்த தேசத்தில் இருக்கின்ற அனைவரும் எவ்வித கிலேசமுமின்றி நத்தாரைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். அவர்களுடைய அபிலாஷைகள் நிறைவேற்றப்படுகின்றன. இன்றைய நிலைமையை மனப்பூர்வமாக வரவேற்கும் வட மாகாண மக்கள் அரசாங்கமும் மேதகு ஜனாதிபதி அவர்களும் தமது எதிர்காலத்தைச் சிறப்பாக அமைக்க உதவி புரிவார்கள் என்று ஆழ்ந்த நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டுள்ளார்கள்.

இந்த நத்தார் திருநாளுக்கு தங்களுக்கு சமாதானமே சிறந்த பரிசாக அமையட்டும்.

நத்தார் பெருநாளில் சக்தி தங்களுக்கு சமாதானத்தை நல்குவதாக. இந் நன்னாளின் சந்தோஷம் தங்களுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதாக அமையட்டும்.

**இப்பெருநாள் தங்களுக்கு அன்பை நல்குவதாக.**
**தங்கள் அயலவர்கள் தங்களை நேசிப்பார்களாக,**
**தொந்தரவுகள் தங்களை அனுகாதிருக்கட்டும்,**
**தேவதைகள் தங்களைப் பாதுகாப்பார்களாக,**
**தேவலோகம் தங்களை அன்புடன் வரவேற்கட்டும்**



இத்தேசத்தில் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நத்தார் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தங்களுக்கு மிகவும் சந்தோஷகரமான நத்தார் உரித்தாகட்டும்.

ஜி.ஏ.சந்திரசிறி
வடமாகாணம்.



### டிசம்பர் 25 அன்று நடந்த முக்கிய நிகழ்வுகள்

- விஞ்ஞானி ஐசக் நியூட்டன் பிறந்தது 1642 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் திகதி.
- நோர்வே நாட்டுக் கண்டுபிடிப்பாளரான அமுண்ட்ஸென் அண்டார்டிகாவைக் கண்டு பிடித்த நாள் - டிசம்பர் 25, 1911.
- மேடம் கியூரி ரேடியத்தைக் கண்டறிந்து உலகுக்கு அறிவித்தது 1898 - ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் திகதி.


அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்.

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**





மோட்டார் சைக்கிள் மற்றும் அனைத்து வாகனங்களினதும் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் ஒட்டி மீள் பாவனைக்கு வழங்கப்படும்.

தொ.பே: 0212228680, 0775925088.
(C/2232)

பைபர் & பிளாஸ்ரிக் உற்பத்திகள் செய்து தரப்படும்

06, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்...

**நடராஜா ஸ்ரோர்ஸ்**
**பல்பொருள் வாணிபம்**

சகல விதமான பால்மா வகைகள்,
பல்பொருட்கள்
அனைத்தும் சில்லறையாகவும்,
மொத்தமாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.



உங்களின் பண்டிகை காலத்தினை குதூகலமாக்கிட எம்மிடம் வண்ண வண்ண பட்டாசுகளினை கொள்வனவு செய்திடுங்கள்.

சிங்கநாதம் றெட் லயன் பட்டாசுகளின் நேரடி இறக்குமதியாளர்கள்

C/2233

64, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 8832.


ளக் கட்டித்
கிறிஸ்மஸ்
ரெஸ்பியோ
ளை ஏற்றி

# கணிதம், பௌத்த சமயம், வரலாறு வினாத்தாள்களும் வெளியாகின?

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் கணிதம், பௌத்த சமயம் மற்றும் வரலாறு ஆகிய வினாத்தாள்களும் முன் கூட்டியே வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச அச்சக உத்தியோகத்தர் ஒருவரும் பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் இருவரும் இந்த வினாத்தாள்களை வெளியாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் வகுப்புக்களை நடாத்தும் சில ஆசிரியர்கள் இந்த பரீட்சை வினாத்தாள் கசிவுடன் தொடர்புபட்டிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

கம்பகா, நிட்டம்புவ, வியான்கொட, மினுவன்கொட மற்றும் கிரிபத்கொட ஆகிய பிரதேசங்களில் பரீட்சை வினாத்தாள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

ஒரு வினாத்தாள் பத்தாயிரம் ரூபா முதல் மூன்று இலட்ச ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, செல்லிடப் பேசியின் பற்றறியைக் கழற்றி அந்த இடத்தில் பரீட்சை வினாத்தாள்கள் கடத்தப்பட்டதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

வினாத்தாள் முன் கூட்டியே வெளியான சம்பவம் தொடர்பில் பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.


கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் விஞ்ஞான பாடம் பகுதி ஒன்று வினாத்தாளின் 19 வினாக்கள் முன்கூட்டியே வெளியாகியுள்ளன.

கம்பகா பிரதேச தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவரின் மாதிரி வினாத்தாளில் இந்த கேள்விகள் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் தனியார் வகுப்பு ஆசிரியரும் அவரது உதவியாளரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர்.

பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர் மற்றும் ஆசிரியர் உள்ளிட்ட சந்தேக நபர்களிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடாத்தி வருகின்றனர். இதேவேளை, சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் தமக்கு முன்கூட்டியே கிடைத்ததாக தனியார் வகுப்பு ஆசிரியர் சம்பத் அத்தட்டகே விசாரணைகளின் போது ஒப்புக் கொண்டுள்ளார்.

## தமிழ் பெண் சிப்பாய்களுக்கு வழங்கப்பட்டது வேதனம்



(கொழும்பு)

அண்மையில் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட தமிழ் பெண் இராணுவ சிப்பாய்கள் தமது முதலாவது சம்பளத்தை நேற்றுமுன்தினம் பெற்றுக் கொண்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்திலிருந்து அண்மையில் இராணுவ பெண்கள் பிரிவிற்கு 102 தமிழ் யுவதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட பெண் இராணுவ சிப்பாய்கள் தமது அடிப்படை வேதனமாக 30 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கான சம்பள நிலுவை உரிய வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டு, அவற்றுக்கான வங்கிப் புத்தகங்களை கிளிநொச்சி இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தமிழ்ப பெண்கள் இராணுவ சிப்பாய்களுக்கு வழங்கி வைத்தார்.

வடக்கில் இடம்பெறும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளில் இந்த பெண் இராணுவ சிப்பாய்கள் தற்சமயம் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நீர் மின் உற்பத்தி 70வீதமாக உயர்வு

(கொழும்பு)

மழையுடன் கூடிய வானிலை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்வடைந்துள்ளது.

இந்நிலையில் வறட்சி காரணமாக நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் 14 வீதமாக குறைவடைந்திருந்த நீர் மின் உற்பத்தியின் பங்களிப்பு 70 வீதமாக உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் சிறு அளவிலான அனல் மின் உற்பத்தி நிலையங்கள் சிலவற்றின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபைத் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக கொத்மலை, காசல்ரீ, விக்டோரியா, போவத்தென்ன, மவுஸ்ஸாகலை, உடவலவ ஆகிய நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்துள்ளது.

## முறையான சேவைகளை வழங்காத முகவர் நிறுவன அனுமதிகள் இரத்து



(கொழும்பு)

வெளிநாடு செல்பவர்களுக்கு முறையான சேவைகளை வழங்காத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு விரிவாக்கல் மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித் தார்.

கொழும்பில் இடம்பெற்ற 'நாட்டின் வீரர்கள் அமைப்பின்' கொழும்பு மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இந்த விடயத்தை அறிவித்தார்.

அண்மைக்காலமாக முறையாக ஒப்பந்தங்கள் இன்றி வெளிநாடுகளுக்கு பணியாளர்கள் அனுப்பப்படுவதன் காரணமாக அவர்கள் பல்வேறு பிரச்சினைகளையும் சிலர் தமது வாழ்க்கையை இழக்கக் கூடிய சூழ்நிலையையும் எதிர் நோக்குகின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபடும் இலங்கையர்களின் குடும்பத்தினர் முகம்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் நோக்கில் நாட்டின் வீரர்கள் அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வெளிநாடு செல்பவர்களுக்கு முறையான சேவைகளை வழங்காத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்வதற்கு மேற்படி அமைப்பினூடாக நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் டிலான் பெரேரா மேலும் தெரிவித்தார்.

## நிலத்திற்கு கீழ் துவாரம் மாத்தளையில் கண்டறிவு

(கொழும்பு)

தேசிய கட்டட நிலையம் மாத்தளை தொட்டகமுவ பகுதிக்கு சென்று தாழிறங்கிய பகுதிகளை ஆய்வு செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

குறித்த பகுதியின் நிலத்துக்கு அடியில் துவாரங்கள் ஏற்பட்டுள்ளமை இந்த ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிலையத்தின் மண்சரிவு ஆய்வுப் பிரிவின் பிரதானி ஆர்.எம்.எஸ்.பண்டார தெரிவித்தார்.

இதற்கமைய குறித்த பகுதியிலுள்ள இரண்டு வீடுகளைச் சேர்ந்தவர்களை வெளியேறுமாறு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் குறித்த பகுதியிலுள்ள கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு முன்னர் நிலத்துக்கு அடியிலான பகுதிகள் குறித்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கான தேவை உள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

## வேகக்கட்டுப்பாட்டு முறை ஜனவரி முதல் அமுல்

(கொழும்பு)

ஜனவரி முதல் வாகனங்களுக்கான வேகக் கட்டுப்பாடு முறை மீண்டும் அமுலாக உள்ளது. உயர்நீதிமன்ற தீர்ப்பை அடுத்து 4 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த வேகக் கட்டுப்பாடு அகற்றப்பட்டிருந்தது.

பாதைகளில் மோட்டார் வாகனங்களின் வேகம் தொடர்பான பிரமாணங்களைக் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் தயாராகி உள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையும் வேகக் கட்டுப்பாடு தொடர்பான சமிக்ஞை பலகைகளைத் தயாரித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் எஸ்.எம். ஹரிச்சந்திர தெரிவித்தார்.

வேகத் தடை அமுலாக்கம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலுக்காகக் காத்திருப்பதாக வாகனப் போக்குவரத்து அத்தியட்சகர் கே. அரசரத்தினம் தெரிவித்துள்ளார்.

வேகத் தடை சமிக்ஞை பலகைகள் ஜனவரி முதல் முழு நாட்டிலும் பொருத்தப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் ஆர்.டபிள்யு. ஆர்.பிரேமசிறி தெரிவித்தார்.

## நில அதிர்வைக் கண்டறிவதற்கு மலைக்கு வெடிவைத்து பரீட்சிப்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் தொடராக உணரப்பட்ட நில அதிர்வின் காரணத்தைக் கண்டறியும் நோக்கில் கல்மலையொன்று வெடிவைத்து உடைக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்ட போதிலும் அதன் சப்தம் பூகம்பப் பதிவு நிலையங்களில் பதிவாகவில்லை என்று புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் கலாநிதி என்.பி. விஜயானந்த தெரிவித்துள்ளார்.

அதேநேரம் தற்போது மழை பொழியத் தொடங்கிய நிலையில் கடந்த ஒரு வார காலப் பகுதியில் எந்தவொரு நில அதிர்வும் பதிவாகவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது, கடந்த நவம்பர் மாதம் 24ஆம் திகதி முதல் அம்பாறை மாவட்டத்தின் ஆறு கிராமங்களில் அவ்வப்போது நில அதிர்வுகள் உணரப்பட்டன.

அந்த அதிர்வுகள் யாவும் பல்லேகலவிலுள்ள நில அதிர்வுப் பதிவுமையத்தில் பதிவாகி உள்ளன.

இவ் அதிர்வுகள் கடந்த 15 ஆம் திகதி வரையும் அவ்வப்போது உணரப்பட்டிருக்கின்றன.

அதன் பின்னர் எதுவித அதிர்வும் உணரப்படவில்லை. இதுவரையும் 12 அதிர்வுகள் இவ்வாறு உணரப்பட்டுள்ளன.

இந்த அதிர்வுகள் இயற்கையானவையா? அல்லது மனித செயற்பாடுகளின் விளைவானவையா? என்பதைக் கண்டறிவதற்கான ஆய்வுகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம்.

எமது ஆய்வாளர்கள் நில அதிர்வுகளைப்பதியும் மூன்று நடமாடும் உபகரணங்களுடன் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அதிர்வு மழை காலம் ஆரம்பமானதன் பின்னர் இற்றை வரை உணரப்படவில்லை. இந்த அதிர்வுகளுக்கு மனித செயற்பாடுகள் காரணமாக இருக்குமா என்பது குறித்தும் ஆய்வுகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் கூறினார்.

## பரீட்சை ஆணையாளரின் பயன் பிரதிக்கல்வியமைச்சர் கேள்வி

(கொழும்பு)

பரீட்சைகளை உரிய முறையில் நடத்த முடியாவிட்டால் பரீட்சை ஆணையாளரின் பயன்தான் என்ன என பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா கேள்வி எழுப்பியுள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை உரிய முறையில் நடாத்த முடியாவிட்டால், பரீட்சை ஆணையாளர் நாயகம் பதவி அவசியமற்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இம்முறை கல்விப் பொதுத் தாராதர சாதாரண தரப் பரீட்சையின் விஞ்ஞான வினாத்தாள் முன்கூட்டியே வெளியாகியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே மீளவும் பரீட்சை நடாத்தப்பட வேண்டும் அல்லது கசிந்த வினாக்களுக்கு மாணவர்களுக்கு முழுப்புள்ளிகள் வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுத்கன்னாவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சைக்கு முன்னதாக பணத்தைக் கொடுத்து கேள்விகளை வாங்கக் கூடிய நிலைமை கிராமப் புற மாணவர்களுக்கு பெரும் அநீதியை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பனைசார் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை அதிகரிக்கவேண்டும்



பனை அபிவிருத்தி சபையூடாக பனைவளத்தை முன்னுரிமைப்படுத்தி செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் அதேவேளை, ஏனைய வளங்கள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பனை வளமேம்பாடு தொடர்பிலான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்குப் பகுதிகளில் பனைவளம் அதிகமாகக் காணப்படுகின்ற போதிலும், அவற்றினூடான உற்பத்திகளை நவீனமயப்படுத்தி மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுததப்படுவது முக்கியமாக இருந்த போதிலும் கிடைக்கப்பெறக் கூடிய ஏனைய வளங்களினூடாக குறித்த தொழிற்துறை மேம்பாடு தொடர்பிலும் துறை சார்ந்தவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

அந்தவகையில் பனை ஆராய்ச்சி நிறுவனத்தினூடாக அடிக்கடி ஆலோசனைச் சபையை கூட்டி கலந்துரையாடி சில செயற்திட்டங்களை முன்னெடுப்பதனூடாக, உற்பத்திகளை நவீனமயப்படுத்தி அவற்றினது சந்தை வாய்ப்பினை உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

குறிப்பாக பனைசார்ந்த உற்பத்திகள் தொடர்பில் புலம்பெயர்ந்த உறவுகளுக்கு தெளிவுபடுத்தப்படும் அதேவேளை, பனை வளங்கள் தொடர்பாகவும் உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் துறைசார்ந்த தொழில்நுட்பவியலாளர்களின் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பெற்று அவற்றினூடாக நவீன உற்பத்திகளை மேம்படுத்துவதில் துறைசார்ந்தவர்கள் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் பனை அபிவிருத்திச் சபையின் மேம்பாட்டு செயற்திட்டங்களுக்காக அரசசார்பற்ற நிறுவனங்களை இணைத்துக் கொள்வது நாடளாவிய ரீதியிலான பனைநடுகைத் திட்டத்தை சமுர்த்தி உள்ளிட்ட திட்டத்தின் ஊடாக முன்னெடுப்பது, அவ்வாறு ஏற்கனவே நடுகை செய்யப்பட்டபனம் கன்றுகளைப் பாதுகாத்து பராமரிப்பது, உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்திய அமைச்சர், சட்ட விரோதமாக பனைகளைத் தறிப்பது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் துறை சார்ந்தோரிடம் பணிப்புரை விடுத்தார்.

இதன்போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், பொதுமுகாமையாளர் லோகநாதன், உள்ளிட்ட பனை அபிவிருத்தி சபையினதும், பனை ஆராய்ச்சி நிலையத்தினதும் துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

# யுனிசெவ் நிதியில் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வு



யுனிசெவ் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி தலைமையில் கொழும்பு பத்திரமுல்லவிலுள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் யுனிசெவ் நிதியுதவியுடன் 2012 ஆம்ஆண்டு முன்னெடுககப்பட்டு செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பாக விரிவாக மீளாய்வு செய்யப்பட்டது. அத்துடன் 2013 ஆம் ஆண்டு யுனிசெவ் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் துறை ரீதியாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், நிதி, திட்டமிடல் பிரதி பிரதம செயலாளர்கள், குறித்த செயற்திட்டங்களுடன் தொடர்புடைய திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் வகுப்பு II தரம் IIஇற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இப்பரீட்சை அடுத்தவருடம் மார்ச் மாதம் கொழும்பில் நடத்தப்படவுள்ளதுடன் மும்மொழிகளிலும் பரீட்சை நடைபெறவுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் பரீட்சைஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும். மேலதிக விபரங்களை 21.12.2012 வர்த்தமானியில் பார்வையிடலாம்.



அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கற்கை நெறி அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கற்கை நெறியை பர்த்தி செய்த அதிகாரிகள் அணியைக் காணலாம். (90)

# பதிவிருக்கப் பெட்டகம்

தமிழ்ச் சமூகத்தில் இனக்குழு வாழ்க்கை முறை அரச ஆதிக்க்த்துக்கு உட்பட்ட பிறகு நிலவிய ஒருவித 'வீரயுகத்தில்' பழைய காட்டுத்தனமான வன்முறைக்கு மறம், வீரம், ஆண்மை, தறுகண் என வீரமரபுகள் ஏற்பட்டுப் புலவர் மரபால் போற்றப்பட்டமைக்குப் புறநானூறு, பதிற்றுப்பத்துப் பாடல்கள் பல சான்றுகளாகும். வேடர்கள் வீரயுகத்தில் வீரர்களானார்கள். போர்க்களத்தில் புறமுதுகிடாமல் பகைவரைக் கொன்று உயிர்நீப்பின் 'உயர்ந்தோர் உலகில்' அமரரானதாக மதிப்பீடுகள் எழுந்தன. வீரயுகத்தில் ஆணாய்ப் பிறந்தவன் நோயுற்று மடிவது இழுக்கு; போரில் வழுப்புண் உறுவது பழி; அரசனுக்காகப் போர்க்களத்தில் படைக்கலன் பட்டு உயிர்நீப்பதே புகழ் என்ற மதிப்பீடுகள் வன்முறைக்குச் சார்த்தப்பட்டன. அரச உருவாக்கத்துக்கும், விரிவாக்கத்துக்கும் தேவைப்பட்ட வீரர்களை உற்பத்தி செய்ததில் மேற்படி அறமதிப்பீடுகளுக்குப் பெரும் பங்கு இருந்தது. **– ராஜ் கௌதமன்**

அன்றாட வாழ்க்கை சார்ந்த பிரச்சினைகளைத் தவிர்த்து விடுவது அவர் பாணி. அவை ஒருபோதும் மக்கள் திரளைக் கொந்தளிக்க வைப்பதில்லை. கலாசாரம் சார்ந்த விஷயங்களைப் பேசுபொருளாக எடுத்துக் கொள்வதே அவர்களைக் கவரும். அவற்றைக் கனவும் இலட்சியவாதமும் சார்ந்து உச்சப்படுத்துவார் அவர். பொது எதிரியை உருவாக்குவார். சகல தீமைகளுக்கும் அதுவே காரணம் என்பார். அதன் மீது வெறுப்பை உருவாக்கி தீவிரப்படுத்தியபடியே செல்வார். மக்களை உணர்ச்சிவசப்படச் செய்யுமாறு பேசத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே அதிகாரம் உரியதாகும் என்பது ஹிட்லரின் வாதம். தனிமனிதனின் சிந்தனைத் திறன், மனசாட்சி ஆகியவற்றை ஊதித்தள்ளிவிட வேண்டும். தனிமனிதர்கள் ஒரு கூட்டமாக ஒன்றிணையும்போது அவர்களின் தனிப்பட்ட அறிவுத்திறன்கள், தர்க்கநியாயங்கள் அனைத்தையும் இழந்து உணர்ச்சிகளால் ஆட்டுவிக்கப்படும் அறிவற்ற ஒற்றைப் பெருங்கும்பலாக ஆகிவிடுகிறார்கள். இந்தக் கும்பல் மனநிலையைக் கையாள்பவர்களுக்கே அதிகாரம் வாய்க்கிறது என்பதே ஹிட்லரின் வரையறுப்பு.

**– ஹிட்லரின் மேடைப்பேச்சு பற்றி, வில்ஹெல்ம் ரீஷ்**

மனிதர்களை ஒரு கூட்டமாகவோ இலக்கமாகவோ பார்ப்பது எனது வழக்கமில்லை. ஒவ்வொரு மனிதனும் எதிர்காலத்தைக் கனவு காணும் போது தன்னை மட்டும் அல்லது தனது குடும்பத்தை மட்டுமே கனவு காணுகிறான். அவனது கனவுகள் இந்த பிறவியில் நிறைவேற வேண்டும். ஒரு தலைமுறையை அடுத்த தலைமுறைக்காக வித்தாக விதைப்பது எனக்கு உடன்பாடற்ற விடயம். இப்படியான பம்மாத்து வசனங்களே எனக்கு தூக்கத்தை கெடுப்பவை. அவை மற்ற மனிதனை முட்டாளாக்க நினைப்பவர்களது வாயில் இருந்து வருபவை. அரசியல்வாதிகளைப் பாருங்கள். தங்களின் குடும்பத்தைக் கவனிக்காமல் இருந்திருக்கிறார்களா? அதேசமயம் அரசியல்வாதிகள் தங்களது நலன்களுக்காக தமது சிந்தனைகளை– தேவைகளை மக்களது விருப்பங்களாகத் திணிக்கிறார்கள். **– நோயல் நடேசன்**

நல்லிணக்கம் என்பது எதிர் தரப்பாரிடையே உறவுகளை வளர்ப்பதை மையப்படுத்துகிறது. உறவுகளின் பரிமாணம் முரண்பாட்டின் உணர்வுகளையும், உளவியல் அம்சத்தையும் உள்ளடக்குவதோடு கடந்த காலத்தில் இடம்பெற்ற குறைபாடுகளை அங்கீகரித்து, ஒருவரில் மற்றவர் தங்கி வாழும் எதிர்காலத்தை தேடுவதும் ஆகும். இருதரப்பாரும் சந்திக்கும் இடம் ஒன்றை நல்லிணக்கம் ஏற்படுத்திக் கொடுக்கிறது. இந்த இடத்தில்தான் முரண்பாடுகளைத் தூண்டுகின்ற வெவ்வேறு சக்திகளும், தொடர்புடைய சக்திகளும் சந்திக்கின்றன. உண்மை, இரக்கம், நீதி, சமாதானம் என்ற வசனங்கள் உட்பட, பிரச்சினைகளில் நேரடியாக ஈடுபட்டுக் காலத்தை வீணடிக்காத முறையில் இருதரப்பாரும் கலந்துரையாடுவதற்கு, ஒரு கோட்பாடு என்ற வகையிலும், செயற்பாடு என்ற வகையிலும் நல்லிணக்கம் பிரச்சினைகளை மறுவடிவமைக்க முயல்கிறது. கடந்த கால துன்பங்களை கைவிடுவதற்கும், எதிர்காலத்தில் இணைந்த நல்வாழ்வை ஏற்படுத்திக் கொள்வதற்கும் புதிய வழிமுறைகளைக் கண்டு கொள்வதுதான் நல்லிணக்கத்தின் பிரதான இலக்கும், முக்கிய பங்களிப்புமாகும். **– ஜோன் போல் லெடராக்**

# க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

**இரசாயனவியல்**

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)


கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான அலகுரீதியான குறிப்புக்களின் தொடர்ச்சி...

**பயிற்சி**

1) பின்வரும் மூலக்கூறுகள் அல்லது அயன்களின் பிரிவுக் கட்டமைப்புக்களையும், பிரிவுக்கலப்புக் கட்டமைப்புக்களையும் வரைந்து அவற்றின் உறுதித்தன்மை பற்றி விமர்சிக்குக.


1. $CO_3^{2-}$
2. $NO_2^-$
3. $N_3^-$
4. $NCS^-$
5. $SO_4^{2-}$


**விடைகள்**


1) 


**Lewis Diagrams**


**Resonance Hybrid**




2) 


3) 

4) 

5) 

மேலே உள்ள பரிவுக் கட்டமைப்புக்களை வரைவதற்கான உதவி கீழே காட்டப்படுகின்றது.

| சேர்வை | சட்டக் கட்டமைப்பு | வலுவளவு ஒட்டு இலத்திரன்கள் | தனிச்சோடி இலத்திரன்கள் |
|---|---|---|---|
| $CO_3^{2-}$ |  | C அணுவின் இல்த்திரன் = 4<br>O அணுக்களின் வலுவளவு இலத்திரன் = 6 x 3 = 18<br>2 (-) ஏற்றம் = 2<br>மொத்தம் = 24 | மொத்த வலுவளவு ஒட்டு இலத்திரன் = 24<br>பிணைப்புசோடி இலத்திரன்கள் = 3x2=6<br>தனிச்சோடி இலத்திரன்கள் = 24 - 6 = 18<br>தனிச்சோடிகள் = 18/2 = 9 |





**2) $NO_2^-$**

O - N- O

N அணுவின் வலுவளவு ஒட்டு இலத்திரன் = 5
O அணுக்களின் வலுவளவு ஒட்டு இலத்திரன் = 6 x 2 = 12
(-) ஏற்றம் = 1/18

மொத்த வலுவளவு ஒட்டு இலத்திரன் = 18
பிணைப்புச் சோடி = 4
தனிச்சோடி இலத்திரன் = 18 - 4 = 14
தனிச்சோடி = 14/2 = 7





**3) $N_3$**

O- N- N

3 x 5 = 15
1
16

16 - 4 = 12
12/2
= 6





**4.$NCS^-$**

N - C - S

4
5
6
15
1
16

16 - 4 = 12
12/2
= 6




## பிணைப்பு வரிசை (Bond Order)

### பரிவு அற்ற மூலக்கூறுகளின் பிணைப்பு வரிசை

ஒன்றைப் பிணைப்பு ஒன்றின் பிணைப்பு வரிசை 1 ஆகும்.
உதாரணம் : I) H -Cl பி.வரிசை 1
இரட்டைப் பிணைப்பு ஒன்றின் பிணைப்பு வரிசை 2 ஆகும்.
O = O பி. வரிசை 2

மும்மைப் பிணைப்பு ஒன்றின் பிணைப்பு வரிசை 3 ஆகும்.

N N பி. வரிசை 3

## பரிவு உள்ள மூலக்கூறுகளின் பிணைப்பு வரிசை


இங்கு பிணைப்பு நிலையாக உள்ளபோதும் பிணைப்பு இலத்திரன்கள் அல்லது தனிச்சோடி இலத்திரன்கள் மாறிக் கொண்டிருப்பதனால் எல்லாப் பரிவுக் கட்டமைப்புக்களையும் கருத்திற்கொண்டே பிணைப்பு வரிசை தீர்மானிக்கப்படும்.

பிணைப்பு வரிசை எப்பொழுதும் குறித்த இரு அணுக்களுக்கிடையேயே கருதப்படும்.

$$\text{பிணைப்பு வரிசை} = \frac{\text{பரிவுக் கட்டமைப்புக்களிலுள்ள 6 பிணைப்புக்கள்} + \pi \text{ பிணைப்புக்கள்}}{\text{கட்டமைப்புக்களின் எண்ணிக்கை}}$$

உதாரணம்:

$O_3$



O - O பிணைப்பு வரிசை $= 1\frac{1}{2}$

## வலுவளவு ஓட்டு இலத்திரன் சோடி தள்ளுகைக் கொள்கை (Valence Shell Electron Pair Repulsion Theory) (VSEPRT)

லூயியின் கட்டமைப்பின் மூலம் மூலக்கூறில் அணுக்கள் பிணைந்துள்ள விதம் பற்றியும், வலுவளவு ஓட்டில் காணப்படும் இலத்திரன்களின் எண்ணிக்கை பற்றியும் பிணைப்புக்களின் தன்மை பற்றியும் தகவல்கள் பெறப்படும். எனினும் வடிவம் பற்றிய தகவல்களை லூயியின் கட்டமைப்பு மூலம் வெளிப்படுத்த முடியாது. மூலக்கூறின் மத்திய அணுவைச் சூழ அமையும் 6 பிணைப்புக்கள், தனி இலத்திரன்சோடிகள், ஆகியவற்றை லூயியின் கட்டமைப்பின் மூலம் பெற்று வலுவளவு ஓட்டு இலத்திரன் சோடி தள்ளுகைக் கொள்கை VSEPRT ஐப் பயன்படுத்தி மூலக்கூறுகளின் வடிவத்தை எதிர்வுகூறலாம்.

VSEPR கொள்கையின்படி மூலக்கூறுகள் அல்லது அயன்கள் பின்வரும் குறியீட்டினால் சுருக்கமாகக் குறித்துக் காட்டப்படும்.

$AX_n E_m$

A - மைய அணு

X - பிணைப்புச் சோடி

n - பிணைப்புச் சோடி இலத்திரன்களின் எண்ணிக்கை

E - தனிச்சோடி

m - தனிச்சோடி இலத்திரன்களின் எண்ணிக்கை

உதாரணம் : $H_2O$ மூலக்கூறில் 2 பிணைப்புச்சோடி இலத்திரன்களும் 2 தனிச்சோடி இலத்திரன்களும் உள்ளன.

VSEPR குறியீடு - $AX_2E_2$

$NH_3$ - 3 பி.சோடி, 1 த.சோடி

VSEPR குறியீடு $AX_3E_1$

$CCl_4$ - 4 பி.சோ, தனிச்சோடி

VSEPR குறியீடு $AX_4E_0$

### லூயியின் கட்டமைப்புக்கள் - 1.7

1.7) A) கீழ்வரும் மூலக்கூறுகள் அல்லது அயன்களின் லூயின் கட்டமைப்புக்களை வரைக

| | | | | |
|---|---|---|---|---|
| 1.71 | (a) $Br_2$ | (b) $H_2Se$ | (C) $COF_2$ | |
| 1.72 | (a) $Br_r$ | (b) $PBr_3$ | (C) NOF | |
| 1.73 | (a) $P_2$ | (b) $COBr_2$ | (C) $HNO_2$ | |
| 1.74 | (a) CO | (b) BrCN | (C) $N_2F_2$ | |
| 1.75 | (a) ClO | (b) $SnCl_3^-$ | (C) $S_2^{2-}$ | |
| 1.76 | (a) $IBr_{2+}$ | (b) $ClF_2^+$ | (C) $CN^-$ | |
| 1.77 | (a) $XeF_2$ | (b) $SeF_4$ | (C) $FeF_6$ | (d) $XeF_5^+$ |
| 1.78 | (a) $I_3$- | (b) $ClF_3$ | (C) $IF_4$- | (d) $BrF_5$ |
| 1.79 | (a) $BCl_3$ | (b) $TeCl_2^+$ | (C) $BeBr_2$ | |
| 1.710 | (a) $BeF_2$ | (b) $BeF_3^-$ | (C) $AlBr_3$ | |

(1.7) B) கீழ்வரும் மூலக்கூறுகளின் அல்லது அயன்களின் பரிவுக் கட்டமைப்புக்களை வரைக

| | | |
|---|---|---|
| 1.711 | (a) $FNO_2$ | (b) SO |
| 1.712 | (a) $NO_2^-$ | (b) HNO |
| 1.713 | (a) $HCO_2^-$ | (formate ion) |

சட்டகம்

```
     O
     |
(H - C - O)
```

1.714 (a) $CH_3NO_2$ (Nitromethane)

சட்டகம்

```
    H   O
    |   |
H - C - N - O
    |
    H
```

## சாலகக்கட்டமைப்புக்கள் (Crystal Structures)

- கட்டமைப்பு அலகுகள் ஒழுங்கான கோலத்தில் ஒன்றுடன் ஒன்று இணைவதன் மூலம் உருவான கட்டமைப்பை, சாலகம் அல்லது இராட்சத மூலக்கூறு எனப்படும்.
- ஒழுங்கான கோலமொன்றைக் கொண்டிருத்தலும், மீண்டும் மீண்டும் அமையும் அடிப்படை அலகினால் உருவாகியிருத்தலும் இராட்சத மூலக்கூறுகளின் பொது இயல்பு.
- இராட்சத மூலக்கூறு கட்டமைப்புடன் கூடிய பல்வேறு சடப்பொருட்கள் இயற்கையில் உள்ளன.
- அணுக்கள் மூலக்கூறுகள் அல்லது அயன்கள் ஒழுங்கான கோலமொன்றிற்கேற்ப அமைந்த சாலக ஒழுங்கமைப்புடன் கூடிய சடப்பொருட்கள் உள்ளன.
- சாலக சடப்பொருட்களின் அடிப்படை அலகுகளுக்கேற்ப அவை பின்வருமாறு வகைப்படுத்தப்படும்
  - ஒத்த அணுச் சாலகங்கள்
  - பல்லின அணுச் சாலகங்கள்
  - முனைவில் மூலக்கூற்றுச் சாலகம்
  - அயன் சாலகம்.
- சாலகச் சடப்பொருளின் அடிப்படை அலகுகளின் தன்மைக்கேற்ப சாலகத்தை உருவாக்கும் பிணைப்புக்கள் பலவகையானவை.
- சாலகத்தை அமைக்கும்போது உருவாகும் பிணைப்பின் தன்மை சாலகத்தின் பௌதிக இயல்பின்மீது செல்வாக்குச் செலுத்துமென
- ஒத்த அணுக்களினால் கட்டியெழுப்பப்பட்டுள்ள வைரம் மற்றும் காரீய இராட்சத மூலக்கூறுகள் ஒத்த அணுக்களிலான சாலகங்களுக்கு உதாரணங்களாகும்.
- பல்லின அணுக்களினால் உருவாகியுள்ள சிலிக்கன் ஈரொட்சைட்டு இராட்சத மூலக் கூறுகள் பல்லின அணுச் சாலகத்திற்கு மேற்கோளாகும்.
- முனைவில் அயடீன் மூலக்கூறினால் உருவான அயடின் பளிக்குகள் முனைவில் மூலக்கூற்று சாலகத்திற்கான மேற்கோளாகும்.
- முனைவு மூலக்கூறுகளினால் உருவான பனிக்கட்டி முனைவு மூலக்கூற்று சாலகமொன்றுக்கான உதாரணம்
- சோடியம் அயன்களினாலும் குளோரைட்டு அயன்களினாலும் உரவான சோடியங் குளோரைட்டு அயன் சாலகத்திற்கான மேற்கோளாகும்.
- ஒத்து, மற்றும் பல்லின அணுக்களினால் சாலகங்கள், அணுக்கள் ஒன்றுடன் ஒன்று பங்கீட்டு வலுப் பிணைப்பின் மூலம் பிணைவதன் மூலம் உருவாகும்.
- தூண்டிய இரு முனைவு, தூண்டிய இரு முனைவுகளுக்கு இடையே ஏற்படும் கவர்ச்சி விசைகள் மூலம் முனைவில் மூலக்கூறுகள் ஒன்றுடனொன்று பிணைவதனால் முனைவில் மூலக்கூற்று சாலகங்கள் உருவாகுமென.
- நிலையான இரு முனைவு - நிலையான இரு முனைவுகளுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளும் கவர்ச்சி விசைகள் மூலம் முனைவு மூலக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று பிணைவதனால் முனைவு மூலக்கூற்று சாலகங்கள் உருவாகும்.
- நேர் ஏற்றமுள்ளதும் எதிரேற்றமுள்ளதுமான அயன்களுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளும் வலிமையான நிலை மின் கவர்ச்சியினால் அயன்கள் ஒன்றுடன் ஒன்று பிணைவதன் மூலம் அயன் சாலகங்கள் உருவாகும்.

- வலிமையான பங்கீட்டு வலுப் பிணைப்புகள் மூலம் ஒத்ததும் பல்லினமானதுமான அணுச்சாலகங்கள் உருவாகியிருப்பதால் அவ்வாறான திரவியங்கள் உயர் உருகுநிலை, கொதிநிலை வன்மையான இழையமைப்பையும் உடையதாக இருக்கும்.

- அணுச் சாலகங்களில் இருக்கும் பங்கீட்டு வலுப் பிணைப்புகள், மிக வலிமையானதாகையால் கரையும் போக்கு காணப்படாது.

- அசையும் இலத்திரன்கள் இல்லாத அணுச் சாலகங்களில் மின் ஊடுகடத்தப்படமாட்டாது.

- பலவீனமான வந்தர்வாலின் பிணைப்புக்களினால் ஒன்றுடன் ஒன்று பிணைப்புற்றுள்ள, அணுக்களினால் முனைவில் மூலக்கூற்று சாலகங்களுடன் கூடிய திரவியங்கள் வன்மை குறைவானதும், ஏனைய சாலகங்களினால் உருவான பதார்த்தங்களுக்குச் சார்பாக தாழ் கொதிநிலை - உருகு நிலைகளைக் கொண்டவையும் ஆகும்.

- முனைவில் மூலக்கூறுகளினால் உருவான பதார்த்தங்கள் முனைவில் திரவங்களுள் கரையும் தன்மை உடையவையாகும். அவற்றில் அசையும் இலத்திரன்கள் இல்லாதவையாகையால், மின்னைக் கடத்த மாட்டாது.

- நிலையான இரு முனைவு நிலையான இரு முனைவு கவர்ச்சி விசைகளினால் (அல்லது ஐதரசன் பிணைப்புகளினால்) பிணைந்துள்ள மூலக்கூறுகளினாலான முனைவு மூலக்கூற்று சாலகங்களினால் உருவான பதார்த்தங்கள், முனைவற்ற மூலக்கூற்று சாலகங்களினால் உருவான திரவியங்களுக்குச் சார்பாக அதிகம் வன்மையானதும், உயர் உருகுநிலை கொதிநிலைகளை உடையதுமாகும்.

- முனைவு மூலக்கூற்று சாலகங்களினாலான பதார்த்தங்கள் முனைவுள்ள திரவங்களுள் கரையும் தன்மை அதிகமுடையவையாகையால், அவற்றில் அசையும் இலத்திரன்கள் காணப்படாமையால், மின்னைக் கடத்தமாட்டாது.


- வலிமையான நிலைமின் கவர்ச்சி விசைகளினால் பிணைந்துள்ள அயன் சாலகங்களினால் உருவான பதார்த்தங்கள், உயர் உருகுநிலையையும் / கொதிநிலையையும் காட்டுபவையாகையால் அதிக வன்மையானவை.

- அயன் சாலகங்களிலான திரவியங்கள், முனைவுடைய கரைசல்களினுள் கரையும் போக்குடையன.

- திண்ம நிலையிலுள்ள அயன் சாலகங்களிலான திரவியங்களிலும் அசையும் இலத்திரன்கள் அல்லது அயன்கள் இல்லாமையால், அவை மின்னைக் கடத்தமாட்டாது.

- அயன் சாலகங்களிலான திரவியங்களை உருக்கும்போது கரைக்கும் போதும், அங்கு அசையும் அயன்கள் நிலவுமாகையால், மின்னைக் கடத்தும்.

### சாலகப் பல்வகைமை





அணு, மூலக்கூறு அல்லது அயன்களிலான சாலக வடிவ கட்டமைப்புக்களுடன் கூடிய சடப்பொருட்கள் இயற்கையில் நிலவுகின்றன. இவற்றுள் அணுக்களிடையே ஏற்படுத்திக் கொள்ளும் பங்கீட்டு வலுப் பிணைப்புக்கள் மூலம் அணுச் சாலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மூலக்கூறு அணுக்களிடையே ஏற்படுத்திக் கொள்ளப்படுகின்ற மூலக்கூறு இடை பிணைப்புக்கள் அல்லது துணை இடை ஈர்ப்புக்கள் மூலம் மூலக்கூற்றுப் பிணைப்பு உருவாக்கப்பட்டுள்ளன. எதிரெதிர் ஏற்றங்களுடன் கூடிய அயன்களுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளும் நிலை மின் கவர்ச்சி மூலம் அயன் சாலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**பலவகையான சாலக அமைப்புக்கள் சில கீழே விவரிக்கப்பட்டுள்ளன. அணுச் சாலகம்.**

சில அணுச் சாலகங்கள் ஒத்த வகையான அணுக்களிலானவை. வேறு சில, இரண்டு அல்லது மூன்று வகை அணுக்களினால் உருவாகின்றன. ஒரே வகையான அணுக்களிலான சாலகங்கள் ஒத்த அணுச் சாலகங்கள் எனப்படும். காபனின் பிற திருப்பங்களாலான (Allotropy) காரியமும், வைரமும் இதற்கு மேற்கோள்களாகும். வெவ்வேறான அணுக்கள் தொடர்புற்று உருவான சாலகங்கள் பல்லின அணுச் சாலகங்கள் என அழைக்கப்படும். சிலிக்கா ($SiO_2$) இதற்கொரு மேற்கோளாகும்.

$sp_3$ கலப்பாக்கமடைந்து காபன் அணுக்கள் ஒன்றுடன் ஒன்று பங்கீட்டு வலப் பிணைப்புக்கள் மூலம், பிணைப்புற்று வைரம் உருவாகியுள்ளது.


எல்லாக் காபன் அணுக்களும் வேறு நான்கு காபன் அணுக்களுடன் தனிப் பங்கீட்டு வலுப்பிணைப்பின் மூலம் பிணைப்புற்றிருக்குமாறு மேற்படி சாலகங்கள் உருவாகியுள்ளன. மத்தியிலுள்ள காபன் அணுவை மையமாகக் கொண்ட நான்முகியொன்றின், உச்சிகளில் ஏனைய நான்கு காபன் அணுக்களும் அமையுமாறு மேற்படி சாலகம் உருவாகியுள்ளது. இது முப்பரிமாண இராட்சத சாலகக் கட்டமைப்பாகும். இயற்கையில் உள்ள பொருட்களுள் வன்மை கூடிய பொருளாக வைரம் கருதப்படுகின்றது.





**வைரத்தின் சாலக அமைப்பு**

$sp_2$ கலப்பாக்கத்தில் உள்ள காபன் அணு ஒன்றுடன் ஒன்று பங்கீட்டு வலுக்களினால் பிணைப்புற்று காரீயம் உருவாகியுள்ளது. எல்லாக் காபன் அணுக்களும் வேறு மூன்று காபன் அணுக்களுடன் ஒற்றைப் பங்கீட்டு வலுப் பிணைப்பின் மூலம் பிணைப்புற்றிருக்குமாறு சாலகங்கள் உருவாகியுள்ளன. ஒவ்வொரு காபன் அணுவும் அதனைச் சூழ அமைந்துள்ள ஏனைய காபன் அணுக்களும் மத்திய அணுவை மையமாகக் கொண்ட தள முக்கோணியொன்றின் உச்சிக்களின் மீது அமையுமாறு உருவாகியுள்ளன. இது இரு பரிமாண இராட்சத சாலக அமைப்பாகும்.

காரீயத்தில் எல்லாக் காபன் அணுவிலும் கலப்பாக்கமடையாத p ஒழுக்கொன்று நிலவுகின்றது. அதில் சோடியாகாத ஒரு இலத்திரனும் உண்டு. கலப்புறாத p ஒழுக்கு இரு பரிமாண சாலகத்தின் தளத்திற்குச் செவ்வனாக அமையும். ஆகவே இரு பரிமாண காபன் படைகளுக்கிடையே கவர்ச்சியை ஏற்படுத்தி மேற்படி சோடியாகாத இலத்திரன்கள் கொண்ட ஒழுக்குகள் உதவும்.




சிலிக்கா எனப்படுவது ஒன்றுக்கொன்று வித்தியாசமான இரு வகை அணுக்களிலான பல்லின அணு சாலகத்திலான பதார்த்தமாகும். எல்லா சிலிக்கன் அணுவும், நான்கு ஒட்சிசன் அணுக்களுடன், எல்லா ஒட்சிசன் அணுவும் சிலிக்கன் அணுக்கள் இரண்டுடன் பங்கீட்டு வலுவின் மூலம் பிணைப்படைந்த சாலகக் கட்டமைப்பினால் சிலிக்கா உருவாகியுள்ளது.




உரு: சிலிக்காவின் சாலக அமைப்பு

(தொடரும்...)

ஒவ்வொரு சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அலகு ரீதியான மாதிரி வினாக்களும் விடைகளும் வெளிவரும்

# ஜனவரி முதல் வாரத்தில் கூடங்குளத்தில் மின்உற்பத்தி



நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் ரூ.13,500 கோடி செலவில் தலா 1000 மெகாவாட் உற்பத்தி திறன் உள்ள இரண்டு அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ளன. முதல் அணு உலையில மின்உற்பத்திக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் முடிக்கப்பட்டுவிட்டன. இதை ஆய்வு செய்வதற்காக இந்திய அணு சக்தி துறை செயலாளர் ஆர்.கே.சின்ஹா நேற்றுமுன்தினம் காலை கூடங்குளம் வந்தார்.

பின்னர் அணுசக்தி கழக உயர் அதிகாரிகள் மற்றும் ரஷ்ய அணுசக்தி கழக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். கூடங்குளத்தில் இந்த வார இறுதியிலேயே மின் உற்பத்தியை தொடங்க திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அணுசக்தி ஒழுங்கு முறை வாரியத்தின் அனுமதி தேவைப்படுவதால் ஜனவரி தொடக்கத்தில் மின் உற்பத்தி தொடங்கும் எனத் தெரிகிறது.

கூடங்குளத்தில் 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகும் போது தமிழகத்திற்கு 955 மெகாவாட் மின்சாரம் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் கூடங்குளத்தில் மின் உற்பத்தி தொடங்கினாலும் படிப்படியாக தான் 1000 மெகாவாட்டை எட்ட முடி யும். அதற்கு மேலும் ஒரு மாதம் ஆகலாம். உற்பத்தியாகும் 1000 மெகாவாட் மின்சாரமும் தமிழ கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுமா என்பது குறித்து மத்திய அரசுதான் முடிவு செய்ய வேண்டும்.

# சிறந்த மாநிலமாக சிக்கிம்

(புதுடில்லி)

இந்தியாவின் சிறந்த, சிறிய மாநிலமாக சிக்கிம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மக்களுக்கான பாதுகாப்பு, சுற்றுச்சூழலை பேணுதல், குடிநீர், வடிகால் உள்ளிட்ட அனைத்து அம்சங்களிலும் மற்ற சிறிய மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்வதற்காக, சிக்கிம் மாநிலத்திற்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் பயன்பாட்டை கட்டுப்படுத்துதல், ஆக்கிரமிப்புகளின் மீது உடனடி நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றிலும் சிக்கிம் முதலிடம் வகிப்பதாக அம் மாநில முதல் மந்திரி பவான் சாம்லிங், டில்லியில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.







(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

**நல்லிணக்க...**

உண்மையிலேயே இனங்களுக்கிடையில் ஐக்கியம், புரிந்துணர்வு, நல்லிணக்கம், பன்முகத்தன்மை, மதச்சார்பின்மை அல்லது சர்வமத ஐக்கியம் என்பன ஏற்படுவதாக இருந்தால், இலங்கைத் தீவில் அரசியலுக்கு வெளியே சமூகத் தளத்தில் புதிய அரசியல் கலாசாரம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.

இத்தகைய மாற்றங்களை உருவாக்குவதற்குத் தற்போதைய இனவாத அரசியல் கட்டமைப்புக்குள் இந்த மாற்றத்தைச் செய்ய முடியாது.


ஏனெனில் சிங்களத் தரப்பாகட்டும், தமிழ்த் தரப்பாகட்டும் (Provocation) இனங்களுக்கிடையில் கோபமூட்டும், இனவாத உணர்வைத் தூண்டும் அரசியலையே செய்து வருகிறார்கள்.

பல்லின சமூகங்களுக்கிடையில் புதிய சிந்தனை, புதிய கலாசாரம், இணக்கப்பாடு, பல் கலாசாரம், பன்முகத்தன்மை, சகிப்புத்தன்மை என்பன உருவாக்கப்பட வேண்டுமாக இருந்தால், யுத்தத்திற்கும் அழிவுக்கும் காரணமானவர்கள் சமூக அரங்கிலும், தேச அரங்கிலும் ஓரங்கட்டப்பட்டு, அனைத்துச் சமூகத்திலும் உள்ள அறிஞர்கள், சிந்தனையாளர்கள், முற்போக்கான கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரை சமூகத் தளத்திற்கும், தேசத்தளத்திற்கும் கொண்டு வருவதன் மூலமே ஓர் அர்த்தமுள்ள மாற்றத்தை நோக்கித் தேசத்தை நகர்த்தலாம்.






# நவீன அணு ஆயுத ஏவுகணையை தயாரிக்கும் முயற்சியில் வடகொரியா



(சியோல்)

10 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கும் நவீன அணு ஆயுத ஏவுகணையை வடகொரியா தயாரிக்கும் அபாயம் நிலவுகிறது என தென்கொரிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதை உறுதிப்படுத்தும் விதமாக தென்கொரிய இராணுவ அதிகாரிகள சில தகவல்களை வெளியிட்டனர். அப்போது இவர்கள் கூறுகையில், மேலை நாடுகள் நீண்டகாலமாக சந்தேகிக்கும் கூற்றுப்படியே வடகொரியா 10 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கும் நவீன அணு ஆயுத ஏவுகணையை தயாரிக்க வாய்ப்பு நிலவுகிறது. இது அமெரிக்காவின் மேற்கு கடற்கரை வரையிலான இலக்கு தூரமாகும் என்று தெரிவித்தனர். மேலும், இந்த ஏவுகணை 500 கிலோ முதல் 600 கிலோ ஆயுதங்களை சுமந்து செல்லக் கூடியதாகவும் இருக்கும். சமீபத்தில் வடகொரியா ரொக்கெட்டை ஏவிய விதம் மற்றும் அதில் பயன்படுத்தப்பட்ட பொருட்களை வைத்து இதை யூகிக்க முடிகிறது என்றும் கூறினார்கள்.

ஆனால் அணு ஆயுத தயாரிப்பு தொழில்நுட்பத்தில் வடகொரியா சில ஆண்டு பின் தங்கி இருப்பதாகவே நிபுணர்கள் கருதுகிறார்கள். எனவே ஏவுகணை சோதனைக்கு சில காலம் பிடிக்கலாம் என்று கூறுகிறார்கள். ஏற்கனவே வடகொரியா ஏவுகணைச் சோதனை மற்றும் அணு ஆயுதசோதனை நடத்துவதற்கு ஐ.நா.சபை தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கிகளை வாங்குவதில் அமெரிக்கர்கள் தீவிரம்

துப்பாக்கி விற்பனையை கட்டுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்காவில் வலுவடைந்து வரும் அதே நேரத்தில் அதன் விற்பனையும் அங்கு அதிகரித்து வருகிறது.

அமெரிக்காவில் கடந்த மாதங்களில் சீக்கிய கோயிலில் நடந்த துப்பாக்கிச்சூடு, கடந்த வாரம் ஆரம்ப பள்ளியில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவங்களையடுத்து துப்பாக்கி விற்பனை பெருமளவில் அதிகரித்துள்ளதாக அந்நாட்டின் மத்திய புலானாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

மக்களின் ஆர்வத்தை பூர்த்தி செய்யும் நோக்கில், துப்பாக்கிகளை விற்கும் சிறு நிறுவனங்கள் முனைப்பு காட்டி வருகின்றன.

எனினும், அமெரிக்காவின் தொடர் வணிக நிறுவனங்களான டிக் ஸ்போர்ட்டிங் குட்ஸ் (Dick's Sporting Goods) தனது 480 கிளைகளிலும் செமிஆட்டோமெட்டிக் (semiautomatic) துப்பாக்கிகளின் விற்பனையை தற்காலிகமாக நிறுத்தி உள்ளது.

இதேபோல், மற்றொரு தொடர் வணிக நிறுவனமான வால்மார்ட்டும் ஒன் லைன் மூலமாக துப்பாக்கிகள் பதிவு செய்யப்படுவதற்கு தடை விதித்துள்ளது.

எனினும் சிறிய அளவிலான கடைகள் துப்பாக்கிகளை பெருமளவில் விற்பனை செய்து வருகின்றன.

பெருகி வரும் ஆபத்துக்களில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளவே துப்பாக்கிகளை வாங்குவதாக பொதுமக்களில் சிலர் தெரிவித்துள்ளனர்.

மேலும், துப்பாக்கி வைத்திருப்பதற்கான உரிமத்தை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கலாம் என்பதால், முன்கூட்டியே அவற்றை தேவையான அளவு வாங்கி வைத்துக் கொள்ள விரும்புவதாகவும் ஒருசிலர் கூறுகின்றனர்.

# ரொட்டி வாங்க நின்றவர்கள் மீது சிரியாவில் விமானத்தாக்குதல்

(டமஸ்கஸ்)

சிரியாவில் இடம்பெறும் மோதலை அடுத்து அங்கு உணவிற்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சிரிய மக்களின் உணவான ரொட்டியை தயாரிக்கும் மாவுக்கு கூட தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ரொட்டிகளைத் தயாரித்து விற்கும் பேக்கரிகளும் மூலப்பொருளான மாவும், இயந்திரங்களை இயக்க தேவையான மின்சாரமும் கிடைக்காமல் மக்கள் திண்டாடி வருகின்றன.

இந்நிலையில், மத்திய சிரியாவில் உள்ள ஹாமா மாகாணத்தின் ஹல்பாயா நகரில் உள்ள ஒரு பேக்கரியின் முன்பு நேற்று முன்தினம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ரொட்டி வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்தனர். இந்த பகுதியை கடந்தவாரம் நடைபெற்ற போரில கைப்பற்றிய போராட்டக்காரர்கள் தங்கள் வசம் வைத்திருந்தனர்.

திடீரென்று பறந்து வந்த போர் விமானங்கள், ரொட்டி வாங்குவதற்காக பேக்கரி முன்பு காத்திருந்த பொதுமக்கள் மீது குண்டு மழை பொழிந்தன. தாக்குதல் நடந்த இடத்திற்கு சென்று செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதால், பலியானவர்கள் தொடர்பான சரியான தகவல்களை அறிவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உள்பட 60க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியாகி இருக்கக்கூடும் என கூறப்படுகின்றது.




# தலிபான் தளபதியை கொலை செய்த ஹரி

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு படையில் பணியாற்றிய இளவரசர் ஹரி தலிபான் தளபதி ஒருவரைக்கொன்றதாக தகவல் வெளியாகி உள்ளது. பிரிட்டன் இளவரசர் ஹரி றோயல் விமானப் படையில் விமானியாகப் பயிற்சி பெற்றவர்.

இவர் ஆப்கானிஸ்தானில் உள்ள பிரிட்டன் படையில் இடம் பெற்றுள்ளார். இங்கு ஹெல்மாண்ட் மாகாணத்தில் தலிபான்களை ஒடுக்கும் பணியில் ஒக்ரோபர் மாதம் ஈடுபட்டிருந்தார்.

இந்நிலையில் பிரிட்டன் விமானப் படையின் அப்பாச்சி ரக ஹெலிகொப்டரில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த ஹரி, ஏவுகணை ஒன்றை ஏவி தலிபான் தளபதி ஒருவரைக் கொலை செய்துள்ளார்.

இத்தகவலை பிரிட்டன் பத்திரிகைகள் தற்போது வெளியிட்டுள்ளன.

# மாடு மேய்ப்பதில் மோதல் கென்யாவில் 39பேர் பலி

(நைரோபி)

கென்யாவில் மாடு மேய்ப் பதில் பழங்குடியினத்தைச் சேர்ந்த இரு பிரிவினரிடையே ஏற்பட்ட மோதலில் 7 குழந்தைக்கள் உட்பட 39 பேர் பலியாகினர்.

கென்யாவில் பொகோமா என்ற பழங்குடியினத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் ஆர்மா பழங்குடியினருக்கு இடையே மாடு மேய்ப்பது, விவசாய நிலம் மற்றும் தண்ணீர ஆகிய விவகாரங்களில் அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டு வருகிறது. கடந்த ஆகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதத்தில் நடந்த மோதலில் 6 பெண்கள், 13 குழந்தைகள் உட் பட 100இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இந்நிலை யில் கடந்த வெள்ளிக்கிழமை பொகோமா பழங்குடியினர் ஆர்மா பழங்குடியினத்தைச் சேர்ந்தவர் கள் வசிக்கும் கிபாவ் கிராமத்திற்கு சென்று தாக்குதல் நடத்தினர். அவர்கள் தாக்குதல் நடத்த வருவதை எதிர்ப்பார்த்த ஆர்மா பழங்குடியினர் பதிலுக்கு தாக்கினர். இந்த மோதலில் 7 குழந்தைகள் உட்பட 39 பேர் பலியாகினர். மேலும் 45 வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது. இந்த மோதலில் பலர் படுகாயம் அடைந்த னர். அதில் ஒருவரின் கை துண்டானது. மாடு மேய்ப்பது தொடரபாக இந்தப் பிரிவினர் இடையே அடிக்கடி மோதல் ஏற்படுவதால் இப்பகுதிக்கு செல்ல சுற்றுலாப் பயணிகள் அஞ்சு கின்றனர்.

அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்கள்

Ceramic Plaza (pvt) Ltd

Bathroom wall Tiles, Floor Tile, Commet Set

வீட்டிற்குத் தேவையான அனைத்து மாபிள்வகைகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.

மற்றும் Pipe Fitting, Accesserises வகைகள்

அனைத்தையும் மொத்தமாகவோ சில்லறையாகவோ பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

077 757 8277
072 680 1780

செரமிக் பிளாசா
ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம்.

(C/2234)

# கிராமிய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவின் வழிகாட்டலின் கீழ் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய தீர்வைத் திணைக்கள அதிகாரிகளின் நிதியுதவியின் கீழ் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அராலி வள்ளியம்மை ஞானபகார்த்த வித்தியாலய மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் முதலானவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு அராலி வள்ளியம்மை ஞானபகார்த்த வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க மற்றும் படை அதிகாரிகள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய தீர்வைத் திணைக்கள அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு 140 மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாடசாலைப் புனரமைக்கவும் சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த உதவிப்பொருட்களையும் பரிசில்களையும் பாடசாலை உபகரணங்களையும் வழங்கிவைத்தனர்.

முன்னதாக இந்நிகழ்விற்கு வந்திருந்த கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க மற்றும் படை அதிகாரிகள் கல்வித் திணைக்கள அதிகாரிகள், தீர்வைத் திணைக்கள அதிகாரிகளுக்கு பாடசாலை மாணவ மாணவியர் மாலை அணிவித்து பான்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையை வழங்கினர். இந்நிகழ்வில் பாடசாலை மாணவியரது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேலும் இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், பாடசாலையைப் புனரமைக்க வர்ணப் பூச்சு மற்றும் பாடசாலை ஆசிரியர்களுக்கு பரிசில்கள் என்பனவும் நிகழ்வின் அதிதிகளால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் பெற்றோர், ஆசிரியர்கள், படையினர் மற்றும் தீர்வைத் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (பா)

# நீர்வேலியில் விபத்து நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கரந்தன் சந்தியில் நேற்றுப் பிற்பகல் கன்ரர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் நவக்கிரியில் இருந்து நீர்வேலி நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் கோப்பாயிலிருந்து நீர்வேலி நோக்கி பயணித்த கன்ரர் வாகனமும் இவ்வாறு விபத்துக்குள்ளாகின. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கெங்காதரன் (வயது - 45), அவரது மனைவி சனாதினி (வயது - 43) பிள்ளைகளான சங்கவி (வயது - 10), கவிமாறன் (வயது - 07) ஆகியோரே காயமடைந்தனர்.

இவர்கள் உடனடியாக கோப்பாய் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (பா)

# படகு அகதிகளை ஆஸி. நாடு கடத்தியது

## மனுஸ் தீவில் 23 இலங்கையர்

23 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் மனுஸ் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசித்த 29 புகலிடக் கோரிக்கையாளர்கள் இவ்வாறு மனுஸ் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் 23 பேர் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் காலங்களிலும் தொடர்ச்சியாக இவ்வாறு புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுவர் என அவுஸ்ரேலிய குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# வெள்ளத்துடன் மிதிவெடிகளும்

(வவுனியா)

நொச்சிகுளம் வீதியிலிருந்து மிதிவெடிகள் இரண்டும் கைக்குண்டுகள் இரண்டும் மீட்கப்பட்டு செயலிழக்க செய்யப்பட்டுள்ளன. வவுனியாவில் குளங்கள் நிரம்பி பெருக்கெடுத்தமையினால் பெருந் தெருக்களில் மண் படைகள் கரைந்துகொண்டு போயுள்ளன. நொச்சிக்குளம் வீதியிலும் இவ்வாறு மண்படைகள் கரைந்து கொண்டு போனதையடுத்தே இந்த வெடிபொருட்கள் வெளியில் தெரிந்துள்ளன.

இந்த மர்மப் பொருட்கள் தொடர்பில் படைத்தரப்பிற்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து விரைந்து செயற்பட்ட படையினர் அந்த வெடிப்பொருட்களை செயலிழக்க செய்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பினால் இந்த வெடிபொருட்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த படையினர், மிதிவெடிகள் ஒவ்வொன்றும் 15 கிலோகிராம் என்றும் இந்த வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டமையினால் பாரிய அனர்த்தங்கள் தவிர்க்கப்பட்டன என்றும் தெரிவித்தனர்.

# ஆளணியை அதிகரிக்க யாழ். மாநகர சபைக்கு அனுமதி

யாழ். மாநகர சபைக்கு அரச மொழிக் கொள்கையை அமுல்படுத்தும் வகையில் 3 மொழிகளுக்குமான உரைபெயர்ப்பாளர்கள் மூவர் புதிய ஆண்டில் நியமிக்கப்படவுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற யாழ். மாநகர சபையின் 12 ஆவது மாதாந்த பொதுக்கூட்டத்திற்கு தலைமை ஏற்று உரையாற்றுகையிலேயெ முதல்வர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும தெரிவிக்கையில்,

01.10.2013 இல் இருந்து இவர்கள் நியமனம் செய்யப்படுவதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த நியமனங்கள் மூலமாக யாழ். மாநகர சபையின் நடவடிக்கைகளை இலகுபடுத்த முடியுமென்பதுடன் மாநகர எல்லைப்பரப்பிற்குள் வசிக்கும் மக்களும் நன்மையைப் பெற முடியும்.

இதேவேளை யாழ். மாநகர தீயணைப்புப் படைப் பிரிவிற்கு 23 பணியாளர்களையும் அரசாங்கம் வழங்கியுள்ளது. அத்துடன் யாழ். மாநகர சபையினது ஆளணியினரது எண்ணிக்கையும் 1210 ஆகவும் அதிகரிக்க அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் புதிய ஆண்டிற்கான நிதிக்குழுக் கூட்டமும் தொடர்பான பிரேரணை மற்றும் புதிய ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பான பிரேரணை என்பனவும் இந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதேவேளை யாழ். மாநகர சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் றீகன் இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ். மாநகர சபையின் ஆட்சிக்காலம் முடிய சிறிது காலமே எஞ்சியிருக்கிறது. இந்தக் காலத்திற்குள் யாழ். மாநகர சபைக்கு நிரந்தரக் கட்டடத்தை அமைத்துக் கொள்வதற்கு அனைத்து மாநகர உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதற்கென அனைத்து உறுப்பினர்களும் நிதிமூலத்தைப் பெற்றுக்கொள்ள முன்வரவேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (பா)

## தினமும்...

நேர வெளிநடப்பின்போது அவசர சிகிச்சைப் பிரிவு, புற்றுநோய்ப் பிரிவு, குழந்தை மருத்துவப் பிரிவு மற்றும் மகப்பேற்றுப் பிரிவு ஆகியன வழமை போல் இயங்கும். மேலும் தனியார் மருத்துவமனைகளிலும், தனியார் சிகிச்சை நிலையங்களிலும் எதுவிதமான சிகிச்சைகளும் நடைபெறமாட்டாது என்றும் இந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வைத்தியர்கள் மீதான தாக்குதல்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்திய நிபுணர், வைத்தியர் பற்றாக்குறையை மேலும் மோசமாக்குவதுடன், பொதுமக்களுக்கான சிகிச்சைகளைப் பாதிக்கும் என்பதால் இவ்வாறான தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன், எதிர்காலத்தில் இத்தகைய மோசமான சம்பவங்கள் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு பொலிஸாரிடம் வைத்தியர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (பா)

## வவுனியாவில்...

செயலாளர் குறிப்பிட்டார்.

அத்துடன், மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் குளங்கள் பெருக்கெடுத்துள்ள நிலையில், 35 குளக்கட்டுகள் உடைப்புக்குள்ளாகியுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை, ஔசதபிட்டிய முதல் செட்டிகுளம் வரையான பிரதான வீதியில் வெள்ளம் நிரம்பியுள்ளதால் அவ்வீதியினூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று முதல் மூடப்பட்டிருந்த ஏ - 9 வீதி நேற்று வழமைக்கு திரும்பிய நிலையில் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

## நாடாளுமன்ற....

அமர்வுகளை ஒத்தி வைக்குமாறு சிரேஷ்ட அமைச்சர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு வெளியிட்ட அறிக்கையை சுயாதீன ஆணைக்குழுவொன்றின் மூலம் விசாரணை செய்ய ஜனாதிபதி தீர்மானித்திருந்தார். இந்தத் தீர்மானத்திற்கு அமைய விசாரணைகளை நடத்தி அதன் தீர்வு காணப்படும் வரையில் நாடாளுமன்ற அமர்வுகளை கூட்ட வேண்டாமென அமைச்சர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் 8 ஆம் திகதி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சவேந்திர சில்வாவை வீட்டுக்கு அனுப்ப சரத் பொன்சேகா முயற்சித்தாரா?

## காலம் கடந்து கசியும் இரகசியம்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில், சரியாகச் செயற்படத் தவறிய இராணுவத்தின் 58 ஆவது டிவிசன் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கு, அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நடவடிக்கை எடுத்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றில் இராணுவ ஆய்வாளர் சாமிந்ர பெர்னான்டோ எழுதியுள்ள பத்தி ஒன்றிலேயே இது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

2009 மே 17 ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில், முள்ளிவாய்க்கால் முற்றுகையை உடைத்துக் கொண்டு நந்திக்கடல் வழியாகத் தப்பிச்செல்ல விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்தே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை 58 ஆவது டிவிசன் தளபதி பதவியில் இருந்து நீக்க சரத் பொன்சேகா முடிவு செய்திருந்தார்.

அந்தக் கட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டுஅம்மான், கடற்புலிகளின் தளபதி சூசை போன்றோர், இராணுவ முற்றுகையை உடைத்துக் கொண்டு தப்பிச் சென்றிருக்கலாம் என்று இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரிகள் பலரும் கருதினர்.

மே 17 ஆம் திகதி நள்ளிரவு நெருங்கும் நேரத்தில் சீனப் பயணத்தை முடித்து திரும்பிய அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பின்னடைவுக்கு பொறுப்பானவர்களை கண்டித்ததுடன் சூடாகவே நடந்து கொண்டார்.

களநிலைவரங்களை மீளாய்வு செய்த சரத் பொன்சேகா, விடுதலைப் புலிகளின் தாக்குதல் நெருகடியை மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மூலம் கையாள விரும்பினார். அதேவேளை, அவர் வகித்து வந்த 58 ஆவது டிவிசன் கட்டளைத் தளபதி பதவியை, அப்போது 59 ஆவது டிவிசனின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவிடம் ஒப்படைத்து விடும்படியும் அவர் பரிந்துரைத்தார்.

2009 மே 18 ஆம் திகதி அதிகாலை விடுதலைப் புலிகளின் இரண்டாவது தப்பியோடும் முயற்சி மேற்கொள்ளப்படுவதற்கு முன்னதாக இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதற்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஒப்புக் கொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பெப்ரவரியில்...

நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பலர் இப் பரீட்சைகளிற்கு முகங் கொடுக்கவில்லை என்பதன் காரணமாகவே இவ் விசேட பரீட்சை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசியலில் இருந்து ஓய்வு; சுகாதார அமைச்சர் அறிவிப்பு



(கொழும்பு)

சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தமது அரசியல் வாழ்க்கையில் இருந்து விரைவில் ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார். விரைவில் தாம் அரசியலில் இருந்து விலகப் போவதாக நேற்று பொலனறுவைப் பாடசாலையொன்றில் இடம்பெற்ற உபகரண கையளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போது தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பிரதான அங்கத்துவ கட்சியான சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளராகச் செயற்பட்டு வருகிறார். எதிர்கால 2 ஆம் மற்றும் 3 ஆம் தலைமுறைகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

தற்போதைய அரசாங்கம் எதிர்கால சந்ததியினருக்கே எந்தவொரு தருணத்திலும் வாய்ப்பளிக்க தயாராக இருக்கிறது. அவர்களுடன் அனுபவங்களை பகிர்ந்துகொள்ள எண்ணியுள்ளேன் என்றார்.

1979 ஆம் ஆண்டு அமைச்சர் சிறிசேன, மாவட்ட அமைப்பாளராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துகொண்டார். அனைததிலங்கை சிறிலங்கா சுதந்திர கட்சி இளைஞர் அமைப்பிலும் அவர் தலைமை வகித்துள்ளார். 1989 ஆம் ஆண்டு பிரதான அரசியலில் களமிறங்கிய அவர், 1994 ஆம் ஆண்டு தொடக்கம் பல அமைச்சரவைகளையும், தமது கட்சியின் பொது செயலாளர் பதவியையும் வகித்து வந்துள்ளார்.


## ஆழிப்பேரலையில் பலியானோருக்கு இரண்டு நிமிட மௌனவணக்கம்

ஆழிப்பேரலைக்குப் பலியானோரை நினைவு கூரும் வகையில், நாளை இரண்டு நிமிடநேர மௌன வணக்கம் செலுத்துமாறு அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆழிப்பேரலைக்கு பலியானவர்களை நினைவு கொள்ளும் வகையில், வரும் புதன்கிழமை காலை 9.25 தொடக்கம் 9.27 வரை மௌனவணக்கம் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அனைத்து அரசதுறை, தனியார்துறை நிறுவனங்களையும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. 2004 டிசம்பர் 26 ஆம் நாள் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தில் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் மரணமானது குறிப்பிடத்தக்கது.

## ஆணின் சடலம் மீட்பு

திருகோணமலை, கிண்ணியாவில் உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலத்தை பொலிஸார் இன்று திங்கட்கிழமை காலை மீட்டுள்ளனர். கிண்ணியா, மயிலப்பன்சேனை பகுதியிலேயே இச்சடலத்தை கிண்ணியா பொலிஸார் மீட்டுள்ளனர்.

இச்சடலம் தம்பலகாமம் பட்டிமேட்டைச் சேர்ந்த கோணமலை சகாதேவன் என்பவரது சடலமாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சடலமாக மீட்கப்பட்டவர் கிண்ணியா, ஈச்சந்தீவு பகுதியில் வாழ்ந்துவரும் ஒரு பிள்ளையின் தந்தையாவார். இவர் கிண்ணியா கண்டல்காடு பகுதியில் மாடுகளை பார்வையிட்டுவிட்டு திரும்புகையில் கடந்த 5 தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாமென உறவினர்கள் தெரிவித்தனர்.



ஹட்டன் - பொகவந்தலாவ - கெர்க்கஸ்வோல்ட் கீழ் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர் சுந்தர்ராஜ் என்வருடைய தோட்டத்தில் டொல்பின் மீனின வடிவத்தில் முளைத்துள்ள கத்தரிக்காய் ஒன்று இனங்காணப்பட்டுள்ளது. ரெக்கை முளைத்தது போன்று காட்சியளிக்கும் குறித்த கத்தரிக்காயை கெர்க்கஸ்வோல்ட் தோட்ட மக்கள் ஆச்சரியமாக பார்த்து வருகின்றனர்.

வாழ்க வளமுடன்


தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : து.சதுஜா

முகவரி : அச்செழு, நீர்வேலி.

அகவை 3 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## உறவுகளை இழந்தவர் தற்கொலைக்கு முயற்சி

(வடமராட்சி)

ஆழியவளைப் பகுதியில் மன உளைச்சலால் பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

ஆழியவளையைச் சேர்ந்த நல்லலிங்கம் சாந்தகுமார் (வயது-36) என்பவரே போத்தல் கண்ணாடித் துண்டுகளால் தன்னைத் தானே வெட்டித் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

இவரது உறவினர்கள் 7 பேர் சுனாமியால் காவுகொள்ளப்பட்டுள்ளனர். இவரது மகன் முள்ளிவாய்க்காலில் இறந்துள்ளார். மன உளைச்சலில் பாதிக்கப்பட்ட இவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (116)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடங்களுக்கு மேலதிகமாக புதிய உயர் அழுத்த மின் மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் புனரமைப்பு வேலைகளுக்காகவும் 26.12.2012 புதன்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் மாதகல் பிரதேசம், மாலிசந்தி முதல் வதிரிச் சந்தி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

27.12.2012 வியாழக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் வல்லைப் பிரதேசம், குஞ்சர்கடை ஒருபகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமனாறு, உடுப்பிட்டி, புறாப்பொறுக்கி, மண்டான், கரணவாய், நெல்லியடிப் பிரதேசம், கரவெட்டிப் பிரதேசம், மந்திகை, சாரையடி, புலோலி, தம்பசிட்டி, பருத்தித்துறை, தும்பளை, திக்கம், வதிரிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

28.12.2012 வெள்ளிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் மாலிசந்தி முதல் வதிரிச் சந்தி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சாரசபை அறிவித்துள்ளது.

## 12 பணிப்பெண்கள் நாடு திரும்பினர்

அபுதாபியில் தனியார் நிறுவனம் ஒன்று பலாத்காரமாக தடுத்து வைத்து சேவையில் ஈடுபடுத்திய இலங்கையைச் சேர்ந்த 101 பணிப்பெண்களில் 12 பேர் நேற்று நாடு திரும்பினர். அபுதாபி முசாப நகரிலுள்ள தனியார் சுத்திகரிப்பு நிறுவனத்திலேயே அவர்கள் பலாத்கரமாக தடுத்துவைக்கப்பட்டு பணிக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அந்த நாட்டிலுள்ள தொழில் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமையவே 101 பெண்களில் 22 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாகவே நாடு திரும்பினர்.

நீர்கொழும்பு, வென்னப்புவ, கம்பஹா, பூகொட மற்றும் ஹங்வெல்ல போன்ற பிரதேசங்களைச்சேர்ந்த 22 வயதிற்கும் 38 வயதிற்கும் இடைபட்டவர்களே இவ்வாறு நாட்டுக்கு திரும்பியுள்ளனர். பணிப்பெண்களாக தொடரந்தும் சேவையாற்ற முடியாதவர்களும் கர்ப்பப்பை சத்திரச்சிகிச்சைக்கு உட்படுத்தப்படவேண்டியவர்களும் இவர்களில் அடங்குவதாக அந்நாட்டு வைத்தியர்கள் சிபாரிசு செய்துள்ளனர். இந்த நிறுவனத்தினால் பலவந்தமாக தடுத்துவைக்கப்பட்டு பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்களில் இலங்கையர்கள் 300 பேர் இருப்பதாக நாடு திரும்பியவர்கள் தெரிவித்தனர்.

# கால்நடைகளை இடமாற்றும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

கால்நடைகளை இடம்நகர்த்தும் போது பின்பற்றும் நடைமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் கால்நடை உற்பத்தி திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஒரு பிரதேச செயலர் பிரிவில் இருந்து மற்றுமொரு பிரதேச செயலர் பிரிவிற்கு கால்நடைகளை கொண்டு செல்லும்போது அல்லது அதே பிரிவிற்குள் வாகனங்கள் மூலம் கால்நடைகளை இடமாற்றம் செய்யும் போது பிரதேச செயலகம் அல்லது அரச கால்நடை வைத்திய அலுவலகத்தில் உரிய விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்வதுடன், உறுதிச்சீட்டு, சுகாதாரம் பற்றி சான்றிதழ் எடுத்துச் செல்லவுள்ள வாகனத்தரச சான்றிதழ் என்பவற்றை சமர்ப்பித்து கால்நடைகள் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தை பெறமுடியும்.

கால்நடைகளைப் பிரதேச கால்நடை வைத்திய அலுவலகத்தில் பதிவு செய்து உரிய இலக்கத்தகட்டினை பெற்று கால்நடைகளின் காதில் இலக்கத்த கட்டை பதிப்பித்தல் வேண்டுமெனவும், இதற்கான கட்டணமாக ஒவ்வொரு பதிவுத் தகட்டிற்கும் 20 ரூபா அறவிடப்படும் எனவும் அவ்அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் கால்நடைகள் தொடர்பான தகவல்களை பிரதேச கால்நடை வைத்திய அலுவலகத்திற்கு எழுத்து மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

இதனூடாக இறந்த, விற்பனை செய்த, மற்றும் புதிய பதிவுகள் (பிறப்பு) கொள்வனவு என்பவற்றினாலான மாற்றங்களை பிரதேச கால்நடை வைத்திய அலுவலகத்திற்கு தெரியப்படுத்தல் வேண்டும். விற்பனை செய்யும் போது கால்நடை உறுதிச்சீட்டைப் பிரதேச கால்நடை வைத்திய அலுவலகத்தில் முன்னிலையில் மாற்றம் செய்தல் வேண்டும்.

இதேவேளை, சுகாதார தரச் சான்றிதழ் பதிவு செய்யப்பட்ட பண்ணையாளர்கள் உடனடியாகவே பெற்றுக்கொள்ள முடியும் இதற்கான கட்டணமாக ரூபாய் 50 ஒவ்வொரு கால்நடைக்கும் அறவிடப்படும்.

கால்நடைகளை கொண்டு செல்வதற்கான வாகனதரச் சான்றிதழ் கால்நடை வைத்தியரால் பரிசீலனை செய்யப்பட்டு வழங்கப்படும். வாகனத்தின் முன்புறம் 30×4 அளவுடைய வெள்ளிநிற காட்போட் அட்டையில் சிவப்பு நிற எழுத்தில் கால்நடை அகற்றல் அல்லது கால்நடைகளை கொண்டு செல்லப்படும் வாகனம் என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கால்நடைகளை ஏற்றி இறக்கும் போது மிருகவதைக்கு உட்படாதவாறு ஏற்றி இறக்கலும் ஏற்ற வகையில் சாய்தளம் இருத்தல் வேண்டும்.

பிரதேச செயலாளர் அலுவலகத்தால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஒவ்வொரு கால்நடைக்கும் 50 ரூபா அறவிடப்படுவதுடன் கால்நடைகள் கொண்டு செல்லப்பட்ட பிரதேச செயலாளரிடம் 3 நாட்களுக்கும் இவ் அனுமதிப்பத்திரம் கையளிக்கப்பட வேண்டும். எனினும் கால நடைகளின் உரிமையை உறுதி செய்ய கிராம அலுவலரின் சான்றிதழ் அவசியமானதில்லை.

இதனுடன், குறித்த நடைமுறைகள் பின்பற்றப்படாத சந்தர்ப்பத்தில் ரூபா 50000 வரையான குற்றப்பணம் அல்லது 3 வருடம் வரையான சிறைத்தண்டனை அல்லது குறித்த இரு தண்டனைகளையும் அனுபவிக்க நேரிடலாம் என கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் விடுத்த அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (69)

## அரசியல் அமைப்பில் மாற்றம் ஆலோசனைகள் வரவேற்பு

### அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு

நாட்டின் அரசியலமைப்பில் திருத்தங்களைச் செய்வதற்கு எழுத்து மூலமான யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு அரசியல் கட்சிகளிடம் கோருவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

உத்தேச அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக எழுத்துமூலமான யோசனைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தற்போது நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம், நீதித்துறை ஆகியவற்றுக்கு இடையிலான அதிகாரச் சமநிலையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை வழங்கும் 13 ஆவது திருத்தம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே, அரசியலமைப்பில் திருத்தங்களைச் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அம்பகன் அச்சகத்தில் 2012 டிசம்பர் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.